Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 06 வெள்ளிக்கிழமை (21-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:26

## யாழ்.முற்றவெளி அருகே தூக்கில் ஆணின் சடலம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.முற்றவெளிக்கு அருகில் உள்ள கந்தப்பு வீதியில் இருக்கும் வெற்றுக்காணி ஒன்றில் கழுத்தில் சுருக்கிடப்பட்டு தொங்கிய நிலையில் - சுமார் 50 வயது மதிக்கத்தக்க - இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காணப்பட்டது.

நேற்றுக்காலை அப்பகுதிக்குச் சென்ற பெண் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில் பொலீஸார் சடலத்தை மீட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவ இடத்துககு நேரில் சென்று பார்வையிட்டார். சடலத்தை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று பிரேதபரிசோதனையையும் மரணவிசாரணையையும் மேற்கொள்ளுமாறும் அவர் உத்தரவிட்டார்.

சடலம் மாமரம் ஒன்றில் கயிற்றில் தூங்கிக்கொண்டிருந்ததாகவும் - சடலத்தின் கால்கள் தரையில் தொட்டபடி சிறிது மடிந்து காணப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-4-139)

### யுத்தநிறுத்தம் தேவையில்லை என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,டிசெ.21

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக அரசாங்கமும் யுத்தநிறுத்தம் செய்வது நல்லதல்ல என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ஸ நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஒரு பாரிய யுத்தத்தை ஆரம்பிப்பதற்காகவே விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு பொ.ஐ.மு. முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

### ஜனாதிபதியிடம் யாழ்.ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.21

"யுத்தத்தை நிறுத்தி, பேச்சுக்களை ஆரம்பிக்க வழிசெய்யும் சமாதான முயற்சிகளுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முழு ஒத்துழைப்பைப் பெற்றுத் தாருங்கள்."

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார் யாழ்.ஆயர் கலாநிதி வண.தோமஸ் சௌந்தரநாயகம்.

இது தொடர்பாக சில தினங்களுக்கு முன்னர் அவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த பொதுத் தேர்தலில் பொ.ஐ. முன்னணிக்கு ஏற்பட்ட தோல்விக்கு எமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.



ஜனநாயக அரசியலில் ஒரு கட்சி வெல்வதும் மற்றது தோற்பதும் தவிர்க்க முடியாதது.

தேர்தல் முடிந்துவிட்டது. அதை யொட்டி எழுந்த போட்டிகள், மோதல்கள், வன்செயல்கள், எதிர்ப்புணர்வுகள், கசப்புணர்வுகள் போன்றவற்றை மறந்து ஒவ்வொருவரும் மற்றவரை மன்னிக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

சாதாரண சமயத்தில் நாம் அனுமதிக்கமாட்டாத பல விடயங்கள் தேர்தல் சமயத்தில் கூறப்பட்டு விட்டன; செய்யப்பட்டுவிட்டன.

ஐ.தே.கட்சிக்கு வாக்களித்ததன் மூலம் போரை முடிவுக்குக் கொண்டு வரவும் இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் அமைதித் தீர்வு காணவும் தமக்குள்ள விருப்பத்தை மக்கள் ஏகோபித்து வெளிப்படுத்தியுள்ளனர்.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஹூஸியன் இராஜினாமா

கொழும்பு,டிசெ.21

லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து ஹூஸியன் ராஜகருணநாயக்கா இராஜினாமாச் செய்தார். இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மிக நெருங்கிய ஆலோசகர் எனக் கூறப்படுகின்றது.

ஊடகத் துறையின் செயலாளராகப் பணியாற்றிவந்த - ஜனாதிபதிக்கு மிக நெருங்கியவரான - ஜனதாஸ பீரிஸ்'க்குப் பதிலாக அப்பதவிக்கு குமார் அபேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ)

# புலிகளின் யுத்தநிறுத்தத்தை வரவேற்கின்றது இந்தியா!

## சமாதானம் ஏற்படுவதற்கு வாய்ப்பு என அறிவிப்பு

புதுடில்லி,டிசெம்பர்21

**ஒருதலைப்பட்சமாக ஒரு மாதகாலத்துக்கு யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதையும் -**

**அதற்குச் சாதகமாகப் பதிலளிக்க இலங்கை அரசு முன்வந்திருப்பதையும் -**

**இந்தியா வரவேற்றிருக்கின்றது.**

"புலிகளின் அறிவிப்பும் இலங்கை அரசின் முடிவும் வரவேற்கத்தக்கவை. இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப நிகழ்வாக இந்தியா இதனைக் கருதுகின்றது.

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் நேற்று செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சகிதம் நாளை இந்தியா வருகின்றார். அப்போது இந்த விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் உட்பட பல உயர்மட்ட அரசுப் பிரமுகர்களுடன் அவர் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்க் கட்சிகளுடனும் புரிந்துணர்வு காண புலிகளுக்கு அழைப்பு விடுக்கிறது ஈ.பி.டி.பி.!

யாழ்ப்பாணம்,டிசெ.21

அரசுடன் சமாதானத்தையும் படையினருடன் மோதல் தவிர்ப்பையும் பேண முன்வருவது போல ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளோடும் அர்த்த புஷ்டியான புரிந்துணர்வு காண விடுதலைப் புலிகள் முன்வர வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றது ஈ.பி.டி.பி.

'யுத்தம் நிறுத்தப்படுவதை வரவேற்கிறோம்' என்ற தலைப்பில் அந்தக் கட்சி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நத்தார் பண்டிகைத் தினம் முதல் ஒருமாத காலத்திற்கு யுத்தநிறுத்தம் செய்யப்போவதாகப் புலிகள் ஒருதலைப்பட்சமாகப் பிரகடனம் செய்துள்ளமையை முழுமனதோடு வரவேற்கின்றோம். யுத்தம் என்பது அழிவுகளையும் இழப்புக்களையும் மட்டுமே தரவல்லது. சமாதானம் நிம்மதியான, அமைதியான வாழ்வையும் ஆக்கபூர்வமான அபிவிருத்தியையும் தரக்கூடியது. எனவே சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதுவே பெரும்பாலான மக்களின் உளப்பூர்வமான விருப்பம். இந்த விருப்பத்தை வெளிக்காட்டக்கூடிய சமிக்ஞைகள் தோன்றியிருப்பது வரவேற்புக்கு உரியதாகும்.

எனினும் யுத்தம் என்பது படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல் சம்பவங்கள் மட்டுமல்ல

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அறிவிப்புக்கு ஸ்ரீல.சு.கட்சியும் வரவேற்பு

ஒருதலைப்பட்சமாகப் புலிகள் அறிவித்திருக்கும் யுத்தநிறுத்தத்தை பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வரவேற்றுள்ளது.

இதன்மூலம் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் புலிகளின யுத்தநிறுத்த அறிவிப்பை வரவேற்றிருக்கின்றார். "இது நல்ல முன்னேற்றம். இந்த நடவடிக்கை வெற்றியளிக்கும் என நான் நம்புகிறேன்." - என்றார் கதிர்காமர்.

(உ)

## இன்று தொடக்கம் தினசரி நான்கு விமான சேவைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் ஹெலிருர்ஸ் நிறுவனத்தின் விமான சேவைகள் இன்றுமுதல் நாளாந்தம் நான்காக அதிகரிக்கப்படுகிறது.

இதன்படி, இன்று தொடக்கம் முதலாவது சேவையில் ஈடுபடும் விமானம் காலை 8.30 மணிக்கு பலாலியிலிருந்து புறப்பட ஏற்பாடாகி உள்ளது. எனவே முதலாவது சேவையில் பயணம் செய்ய விரும்புபவர்கள் இன்று காலை 5 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலய மைதானத்துக்கு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

காலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள போதிலும் மக்கள் தமது பயண அனுமதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் தரும் இலங்கையின் முடிவால் புலிகள் அதிருப்தி!

லண்டன்,டிசெ.21

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இந்தியாவுக்கு முக்கிய இடமளிக்கும் இலங்கை அரசின் போக்கால் அதன் (இலங்கையின்) உள்நோக்கம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு ஐயுறவும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

புலிகள் சார்பு வெளியீடான 'தமிழ் கார்டியன்' இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

"சமாதான முயற்சிகளில் இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் விதத்திலான இலங்கை அரசின் ஒருதலைப்பட்ச அறிவிப்பு தமிழ்ச் சமுதாயத்தில் ஆச்சரியத்தையும் கடும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

"இது விடயத்தில் இலங்கை அரசின் போக்கு, அதன் உள்நோக்கம் குறித்து அதிக சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

"இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனுசரணையாளர் நோர்வேயே.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்பு, இந்த விவகாரத்தில் நோர்வேயின் எதிர்காலப் பங்குபணியை ஐயுறவுக்குள்ளாக்கியுள்ளது.

"இந்த விடயத்தில் அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு இந்தப் பிராந்தியத்திலும் பூகோள வலிமையிலும் வலுவான ஏனைய சக்திகளை விட நோர்வேயே பொருத்தமானது என புலிகள் கருதுகின்றனர்.

"எனவே நோர்வேயை ஒதுக்கும் எந்த முயற்சியையும் புலிகள் அங்கீகரிக்கப்போவதில்லை.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரனின் அமைச்சுக்கு செயலாளர் பரமேஸ்வரன்

கொழும்பு,டிசெ.21

புதிய அரசின் அமைச்சுக்களின் செயலாளர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி இதுவரைகாலமும் வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி, கலாசார, விளையாட்டுத்துறையின் செயலாளராகப் பணிபுரிந்த கே.பரமேஸ்வரன் இந்துசமய விவகாரங்களுக்கான அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முக்கிய செயலாளர்கள் சிலரின் பெயர் விவரங்களும் அவர்கள் செயலாளர்களாகப் பதவியேற்கும் அமைச்சுக்களின் விவரங்களும் வருமாறு:-

★ சரித்த ரத்வத்தை - கொள்கை அபிவிருத்தி, நிதி

(10ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஆப்கானிஸ்தானுக்குச் செல்ல பன்னாட்டுப் படைகள் தயார்!

லண்டன்,டிசெ.21

ஆப்கானிஸ்தானில் போரின் பின்னான பணிகளைக் கண்காணிப்பதற்காக பிரிட்டன் தலைமையிலான படைகள் தயாராகியுள்ளன. 'சர்வதேசப் பாதுகாப்பு உதவிப் படைகள்' (ஐ.எஸ்.ஏ.எவ்.) என்ற பெயரில் இந்தப் படையினர் ஆப்கானிஸ்தானில் செயற்படுவர்.

ஆப்கான் செல்லவுள்ள இந்தப் பன்னாட்டுப் படைகள் இறுதி செய்யப்பட்டுவிட்டன. இந்தப் படையணியில் பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், ஆர்ஜென்ரீனா, இத்தாலி, நியூசிலாந்து, கனடா, துருக்கி, ஜோர்டான், மலேஸியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த படையினர் பிரிட்டனின் தலைமையில் செயற்படுவர்.



கந்தகார் விமான நிலையம் முன்பாக காவல் கடமையில் அமெரிக்கச் சிப்பாய்.

ஐ.எஸ்.ஏ.எவ். படையினர் ஆப்கான் தலைநகர் காபூலிலேயே செயற்படுவர். சுமார் ஆறு மாதங்கள் வரையே அவர்கள் அங்கு தங்கி இருப்பர் என்றும் -

நீண்டகாலத்துக்கு ஆப்கான் மண்ணில் தங்கி இருக்கும் செயற்திட்டம் எதுவும் இல்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த படையணி குறித்து பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜக் ஸ்ரோ ஐ.நா.பொதுச் செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். பிரிட்டிஷ் துருப்புக்கள் முதல் மூன்று மாதங்களுக்கு ஐ.எஸ்.ஏ.எவ். படைகளுக்குத் தலைமை தாங்கும். பின்னர் அந்தப் தலைமைப் பதவி வேறொரு நாட்டிடம் கையளிக்கப்படும் என்று அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஏ.எவ். படைகள் அடுத்த மாதம் நடுப்பகுதியளவிலேயே ஆப்கானுக்குப் போய்ச்சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டிசெம்பர் 28ஆம் திகதிக்கு முன்னர் படைகள் ஆப்கானிஸ்தானுக்குப் புறப்படும் சாத்தியங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.எஸ்.ஏ.எவ். படைகளுக்குத் தலைமை தாங்க உள்ள பிரிட்டிஷ் ஜெனரல ஜோன் மக்ஹோல் ஆப்கானில் தாம் எதிர்நோக்க உள்ள பணி "சவாலானது, வேறுபாடுகள் நிறைந்தது, சிலசமயம் ஆபத்தானது" என்றார்.



ஆப்கானில் அமெரிக்கத் துருப்புக்கள்

இதேவேளை ஆப்கான் இடைக் காலத் தலைவர் ஹமீத் ஹர்சேயும் பன்னாட்டுப் படைகள் நீண்ட காலம் ஆப்கானிஸ்தானில் தங்கி இருக்கா என்று தெரிவித்துள்ளார். (ம)

# தற்கொலைத் தாக்குதல்களை ஹமாஸ் இடைநிறுத்தியது

பலஸ்தீன அதிகாரசபையால் கொடுக்கப்பட்ட கடும் அழுத்தங்களை அடுத்து இஸ்ரேலியர்களுக்கு எதிரான தற்கொலைத் தாக்குதல்களை இடைநிறுத்துவதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.



ஹமாஸ் இயக்க அலுவலகம் பலஸ்தீன அதிகாரிகளால் மூடப்படுகிறது.

மேற்குக்கரையின் றமழான் நகரில் உள்ள ஹமாஸ் இயக்க மூத்த தலைவர் ஷேக்ஹஸன் யூசுப் தெரிவிக்கையில் - "கொலைத் தாக்குதல்கள் எல்லாவற்றையும் எமது அமைப்பு இடைநிறுத்தி வைத்துள்ளது. பலஸ்தீனர்களின் நன்மை கருதியே நாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்" - என்றார்.

முன்னதாக இஸ்ரேலியர்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துமாறு யஸீர் அரபாத் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் அதனைப் புறக்கணித்துவிட்டு ஹமாஸ் இயக்கம் தற்கொலைத் தாக்குதல்களை நடத்திவந்தது.

இதனால் ஆத்திரமடைந்த பலஸ்தீன அதிகாரசபை ஹமாஸ் அமைப்பு மீது கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தது. ஹமாஸ் இயக்க அலுவலகங்களை அதிகாரிகள் மூடினார்கள். இதனால் புதன் இரவு இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. இடையில் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நெருக்குவாரங்களை அடுத்தே ஹமாஸ் இயக்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# அவசரப்பட்டு இந்தியா நடவடிக்கை எடுக்காது

## நாடாளுமன்றில் அத்வானி தெரிவிப்பு



புதுடில்லி,டிசெ.21

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதலுக்காக பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுக்கும் விடயத்தில் இந்திய அரசு அவசரப்பட்டுச் செயற்படாது என்று இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி நாடாளுமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் பாகிஸ்தான் முழுதாகத் தொடர்புபட்டிருந்தது என்பதை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்த இந்தியா தயாராகவுள்ளது என்றும் அத்வானி மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கடும்தொனியில் எச்சரித்த அத்வானி, இதற்கு ஆதாரமாக ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதத்துக்குத் துணை போவதை நிறுத்தி இந்தியாவால் தேடப்பட்டுவரும் தாவூத் இப்ராஹிம் உட்பட அனைத்துத் தீவிரவாதிகளையும் ஒப்படைக்க வேண்டும் என்றார்.

இதற்கிடையில் -

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதலில் பாகிஸ்தான் தொடர்புபட்டிருப்பதற்கான ஆதாரங்களை ஐ.நாவிடம் சமர்ப்பிக்குமாறு பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது. (ம)

# பாகிஸ்தான் எல்லையில் கைது செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டுசெல்கையில் அல்கெய்டா கைதிகள் கலகம்!

## 6 பொலீஸார் உட்பட 12 பேர் பலி!

இஸ்லாமாபாத்,டிசெ.21

ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பியோடும் அலகெய்டா அமைப்பின் உறுப்பினர்கள் எல்லை தாண்டிப் பாகிஸ்தானுக்குள் நுழையாமல் இருப்பதற்காக ஆப்கான் - பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பாகிஸ்தானிய அதிகாரிகள் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் -

பாகிஸ்தானுக்குள் நுழைந்த அல்கெய்டா அமைப்பு உறுப்பினர்கள் சிலரைப் பாகிஸ்தானியப் பொலீஸார் கைது செய்துள்ளனர். அவர்களைச் சிறைக்குக் கொண்டு சென்ற சமயத்தில் அவர்கள் கலகத்தில் ஈடுபட்டதில் 12 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 6 பேர் அல்கெய்டா அமைப்பு உறுப்பினர்கள். மற்றைய அறுவரும் பொலீஸார்.

ஆப்கான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ள குர்ரம் என்ற இடத்தில் வசிக்கும் பழங்குடி இன மக்களிடையே மறைந்திருந்த அல்கெய்டா அமைப்பினரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்ட 156 அல்கெய்டா உறுப்பினர்களும் பாராஷினார் பொலீஸ் நிலையத்தில் இருந்து பெஷாவரில் உள்ள சிறைச் சாலைக்கு பஸ் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டபோது இந்தக் கலகம் இடம்பெற்றது.

பஸ்ஸ*க்குக் காவலாகச் சென்ற பொலீஸாரின் துப்பாக்கிகளைப் பறித்து கைதிகள் தாறுமாறாகச் சூடு நடத்தியதாகவும் -

பொலீஸாரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் - பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் 40 அல்கெய்டா உறுப்பினர்கள் தப்பியோடியதாகவும் -

அவர்களில் சிலர் மீண்டும் கைது செய்யப்பட்டுவிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அல்கெய்டா உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதை அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ட்ரம்ஸ்பீல்ட் வரவேற்றுள்ளார். "பாகிஸ்தானியப் படையினர் மிகநல்ல காரியத்தைச் செய்திருக்கின்றார்கள்" என்றார் அவர். (ம)



ஆப்கான் எல்லையில் பாக். படையினர் தீவிர சோதனை

# இந்தியா - பாகிஸ்தான் இடையே எல்லையில் பதற்றம் அதிகரிப்பு!

## இருதரப்பும் படைகளைக் குவிக்கின்றன!!

புதுடில்லி,டிசெ.21

இந்திய நாடாளுமன்றத்தின்மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையேயான முறுகல் நிலை மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது. கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுக்கு அருகே இரு தரப்பும் படைகளைக் குவித்து வருகின்றன. எந்த நேரமும் யுத்தம் மூளலாம் என்ற பதற்றநிலை எல்லையில் நீடிக்கின்றது.



எல்லை நோக்கி விரையும் இந்தியப் படையினர்.

"எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் படைகளைக் குவித்து வருகின்றது. பதிலுக்கு நாங்களும் படைகளைக் குவித்து வருகின்றோம்" என்றார் இந்திய இராணுவத் தளபதி எஸ்.பத்மநாதன்.



இந்திய வீதியொன்றில் போருக்காக நிதி திரட்டப்படுகிறது.

நாடாளுமன்றம் மீதான தாக்குதலை அடுத்து இந்தியா, பாகிஸ்தான்மீது இராணுவத் தாக்குதல்களை நடத்தவேண்டும் என்று உள்ளூரில் பல மட்டங்களில் இருந்தும் இந்திய அரசுக்கு கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுவருகின்றன.

ஆனால் பாகிஸ்தானுக்கு எதிராக முதலாவது ஆயுதமாக இராஜதந்திரத்தையே பயன்படுத்துவோம் என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார். "நாம் பொறுமை காட்டி வருகின்றோம். இராஜதந்திரத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த முயற்சி செய்கின்றோம். ஆனால் ஏனைய நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. தீர்மானம் ஏதும் மேற்கொள்வதற்கு முன்னர் அவற்றைக் கவனமாகப் பரிசீலனை செய்வோம்" - என்றார் அவர்.

இதேவேளை -

இந்திய நாடாளுமன்றம் மீது தாக்குதல் இடம்பெறலாம் என்று உளவுத் தகவல்கள் முன்கூட்டியே தெரிவித்திருந்தபோதும் அரசு அதனைக் கவனத்தில் எடுத்து தீவிரவாதிகளின் தாக்குதலைத் தடுக்கத் தவறிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். அரசு இவ்வாறு கவனக்குறைவாக நடந்துகொண்டதாலேயே 1999ஆம் ஆண்டு காகில் போர் மூண்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில் -

பாகிஸ்தானில் இருந்து எல்லையைத் தாண்டி இந்தியக் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதிக்குள் நுழைய முயன்ற 5 தீவிரவாதிகளைத் தாம் நேற்று சுட்டுக்கொன்றதாக இந்தியப் படையினர் அறிவித்துள்ளனர். இந்த ஐவரும் பாகிஸ்தானைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்று இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து அமெ

### உலக அரங்கில்

ரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் இரு நாடுகளுடனும் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தியுள்ளார்.

அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள இரு நாடுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வதைத் தவிர்த்து பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இரு நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும் என்று அமெரிக்கா இரு நாடுகளிடமும் கேட்டுள்ளது. (ம)

# அமெரிக்க தாக்குதல் சந்தேகநபருக்கு விளக்கமறியல்



நியூயோர்க்டிசெ.21

அமெரிக்காவில் கடந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் வேர்ஜினியா நீதிமன்றில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மொரோக்கோ வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சுக் குடிமகன் ஸகாரியாஸ் மௌஸாகி என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார். (ம)



இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதலையடுத்து பாகிஸ்தான் மீது படை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினர் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

## கோப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை முத்தமிழ் விழா
## பிற்போடப்பட்டுள்ளது

22.12.2001, 23.12.2001 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி விழா சீரற்ற காலநிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். மேற்படி விழா நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படும்.

செயலாளர்,
கோப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை.
(96155)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தாயின் மடியில்
10 - 05 - 1979

இறைவன் அடியில்
24 - 12 - 2000

### கனகலிங்கம் சுரேஸ் (கண்ணன்)

*இன்பத்தை யாசிக்கவே பனித்*
*தேசம் அனுப்பி வைத்தோம்*
*கண்ணா நீ எங்கு சென்றாய்!*
*தவிக்கின்றதே எங்கள் நெஞ்சம்*
*ஒற்றை மகனைப் பெற்றெடுத்தோம் – இறைவா!*
*அவனையும் பறித்தாயோ!*
*உயிரைத் தான் எடுத்தாய் – உடலைத்தான்*
*காணவிட்டாயோ – இறைவா!*
*பெற்றவர்களை கலங்கித் தவிக்கவிட்டு*
*சென்றாயோ கண்ணா!*
*ரஷ்யாவில் உன்னுயிரையும் பயணத்தையும் முடித்து*
*விட்டியே கண்ணா!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*விவேகானந்தா வீதி,*
*மஞ்சத்தடி, இணுவில்.*

பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, சகோதரர்கள்.
(96157)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
24 - 10 - 1946

உதிர்வு
21 - 11 - 2001

### திருமதி லீலாவதி கந்தசாமி

(புங்குடுதீவு 3ஆம் வட்டாரம்)

எங்கள் அன்னையே! உயிரின் உயிரே!
பாசத்தின் பிறப்பிடமே எமை வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தெய்வமே! - நீங்கள்
மறைந்து நாள்கள் 31 ஆகி விட்டபோதும் - உங்கள்
நினைவுகள் எம் உயிரிருக்கும் வரைக்கும் நிலைத்திருக்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தி அடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*70/11, அரசடி வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*
(96146)

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் இராசரத்தினம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இராசரத்தினம் 19.12.2001 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பூங்காவனம் தம்பதியினரின் மூத்த புதல்வரும், பாக்கியலட்சுமியின் (கொழும்பு) அன்புக் கணவரும் லம்போதரனின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, விஜயரத்தினம் ஆகியோரின் சகோதரரும் முத்துக்குமாரு (கனடா), திருப்பாவை (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் வித்தகன், விபூசனன் (லண்டன்) ஆகியோரின் பெரியதகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.தம்பித்துரை
(மைத்துனர், இளைப்பாறிய ஆசிரியர்)

*29, அரசடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(96160)

## மருந்தெண்ணெய் விநியோகம்

சில்லாலை Dr. அல்போன்ஸஸ் அத்தனாசியாரின் நேரடிக் கண்காணிப்பில் தயாரிக்கப்பட்ட மருந்தெண்ணெய் வகைகளைக் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி கமலினி ரஞ்சன்**
இல.22, கலைமணி வீதி,
(அம்மன் கோயில் வீதி)
கட்டப்பிராய்.
(96158)


## நிறைஞ்சனாஸ்
சங்கானை
புதிய வெளியீடு
அஜித், தேவயானி, பார்த்தீபன்
நடித்த
**நீ வருவாய் என**
(சீல்ஸ்)
சிறந்த பாடல்கள் நிறைந்த படம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
(C/19779)

## ராஜா யாழ்ப்பாணம்
*சில தினங்களுக்கு மட்டும்*
ரஜனி, பிரபு, சீதா, கௌதமி
நடிப்பில்
**குருசிஷ்யன்**
(ரீல்ஸ்)
தினசரி:- 10.00, 3.00 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.00, 2.00, 5.00
(C/19778)

## நாகம்ஸ் சுன்னாகம்
*சில தினங்களுக்கு மட்டும்*
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன்
நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(96153)


## நெடுந்தீவு கிழக்கு முருகன் கோயில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
## பிற்போடப்பட்டுள்ளது

நெடுந்தீவு கிழக்கு முருகன் கோயிலில் நாளை (22.12.2001) சனிக்கிழமை நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 22.02.2002 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

தலைவர்,
நெடுந்தீவு கிழக்கு முருகன் கோயில்.
(C/19873)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சுவாமிநாதர் பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஊழியர் - பலாலி, கட்டுநாயக்கா விமானநிலையங்கள்)

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்ற உறுப்பினரும், கொழும்புத்துறை மேற்கு, வதிரபீட விநாயகர் ஆலய அறங்காவலர் சபைச் செயலாளரும் எமது பிரதேச 'உதயன்' செய்தியாளருமான திரு.பா.நந்தகுமார் அவர்களின் அன்புத் தந்தையார் இறைபதம் எய்தியமையால் துயருற்று நிற்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன், ஆத்மா சாந்தி அடைய வதிரியமர் விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

இந்து இளைஞர் மன்றம்,
கொழும்புத்துறை மேற்கு.
(96159)

## வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
## 2002ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 27.12.2001 நண்பகல் 12.00மணிவரை.
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 28.12.2001 நண்பகல் 12.00 மணிவரை.
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 28.12.2001 பிற்பகல் 2.00 மணிவரை.
04. கேள்விப் பத்திரங்களை அந்தந்த அலுவலகத்தில் (உப) பெற்றுக்கொள்ளலாம்.
05. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை அவ்வலுவலக கேள்விப்பெட்டியிலும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.29, செட்டித்தெரு, நல்லூர்" என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கவேண்டும்.

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப்பணம் (பொ.சே.வரி நீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த தொகை (பொ.சே.வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்:-** | | | |
| 01. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 2000.00 | 135000.00 |
| 02. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 250.00 | 2000.00 | 728600.00 |
| **புத்தூர் உப அலுவலகம்:-** | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 1000.00 | 80200.00 |
| 02. வாதரவத்தை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 3150.00 |
| 03. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 150.00 | 500.00 | 12000.00 |
| 04. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 100.00 | 250.00 | 1400.90 |
| 05. ஆவரங்கால் மீன் சந்தை | 50.00 | 100.00 | 315.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்:-** | | | |
| 01. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 100.00 | 250.00 | 3150.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 1080.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்:-** | | | |
| 01. கோப்பாய் வடக்கு சந்தை | 100.00 | 250.00 | [illegible] |
| 02. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 150.00 | 500.00 | 34101.50 |
| 03. இருபாலை சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 2227.50 |
| 04. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 2227.50 |
| **உரும்பிராய் உப அலுவலகம்:-** | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 2000.00 | 94500.00 |
| 02. உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 150.00 | 500.00 | 27700.00 |
| 03. ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 3600.00 |
| 04. உரும்பிராய் மத்தி சந்தை | 200.00 | 1000.00 | 57600.00 |

*குறிப்பு:-* கேள்விப்பத்திரப்பணம், சித்திபெற்ற கேள்வித்தொகை என்பனவற்றுக்கு 12.5% பொருள்கள் சேவைக்கான வரி செலுத்துதல் வேண்டும்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
20.12.2001.

பூ.குணசிங்கம், ஜே.பி.யூ.எம்.
தவிசாளர்.
(C/19870)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## A/L பொருளியல்

சுயமாகக் கற்கக்கூடிய பயிற்சி வினா, வினா விடைகளடங்கிய, பொருளாதார வளர்ச்சி, வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், சர்வதேச வர்த்தகம், பணம், நாணயமாற்றுவீதம், நடைமுறை விடயங்கள், 2000 - 2001, பரீட்சை வினா விடைகள் ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர் வே.கருணாகரன். (96056)

## மணமகள் தேவை

கௌரவ கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த, 1969இல் பிறந்த, கொழும்பில் தனியார் கம்பனி ஒன்றில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு தகுதியான 5வயது குறைந்த கொழும்பில் வசிக்கக்கூடிய மணமகள் தேவை. முழு விபரத்துடன் கடித மூலம் தொடர்புகொள்ளவும். தகுதியற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும். விள. இல.1419, C/o உதயன், யாழ்ப்பாணம். (95996)

## விற்பனைக்கு

மூன்று நல்லின கடாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.பாலா, இல.108, அரசடி றோட், கந்தர்மடம். (96113)

பிறிமா, பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (96103)

## தவறிவிட்டன

இல.2, 3ஆம் குறுக்குத்தெரு பாஷையூர் என்னும் முகவரியுடைய அன்ரன் மரிய கொறற்றி என்பவருடைய தேசிய அ.அ.(இல.676060839V), விசேட அடையாள அட்டை என்பன சின்னக்கடைக்கும் வேம்படிக்கும் இடையில் டயறியுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (96122)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.21

தேசிய கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் இலங்கை மின்சாரசபையில் பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் அனைத்து பயிலுநர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதிநிதி ஒருவர் அறிவித்துள்ளார். (க-6)

## சுன்னாகத்தில் நாய்களுக்கு தடுப்பூசி

வலிகாமம் தெற்கு,டிசெ.21

சுன்னாகம் கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பகல் 12.30 மணிவரை வளர்ப்பு நாய்களுக்கான ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்து போடப்படவுள்ளது.

இப்பகுதியில் உள்ளவர்கள் தவறாது தமது வளர்ப்பு நாய்களை கொண்டு வந்து தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுமாறு சுன்னாகம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு.பத்மகுமார் அறிவித்திருக்கிறார். (க-152)


## படிவம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் படிவம் விற்பனையாகின்றது.
சில்லறை விலை ரூபா 2/=
கடித உறை ரூபா 2/=
விவரம் ரூபா 5/=

நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

## மலிவு விற்பனை

டிசெம்பர் 31வரை மட்டுமே.

நல்லின ஒட்டு எலுமிச்சை, மாங்கன்றுகளும், விதை எலுமிச்சங்கன்றுகளும், லெமன், லாவுலுக் கன்றுகளும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

*சாதாரண ரோஜா பதிக்கன்று 40/=*
*ஒட்டு நல்லின ரோஜாக்கன்றுகளுக்கு பதிவு செய்யவும்.*
ஒரு கன்றின் விலை 150/=

தொடர்பு:-
அதிபர்,
யாழ்.கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

## வெளிவந்துள்ளது

சங்கீதம்
தரம் 10, 11
ஆக்கம்: பொன். ஸ்ரீ வாமதேவன்
வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (96149)


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் திருப்பாவை ஓதுதல் போட்டி

எமது ஆலயத்தில் வருடாவருடம் நடைபெறும் மேற்படி போட்டி இவ்வருடமும் நடைபெறவுள்ளது. இதில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

**போட்டி பற்றிய அறிவுறுத்தல்கள்**

1. திருப்பாவையின் முதற் பத்துப்பாடல்களும் பண்ணுடன் பாடுதல்
2. கீழ்ப்பிரிவு தரம் 6-7
   மத்திய பிரிவு தரம் 8-9
   மேற்பிரிவு தரம் 10-11
3. விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்/பிரிவுத்தலைவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. விண்ணப்ப முடிவு திகதி: 05-01-2002
5. போட்டி நிகழ்வுத் திகதி: 06-01-2002 நேரம் காலை 10 மணிக்கு.
6. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,
*துன்னாலை வடக்கு, புலோலி.*
(96140)

## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### 150ஆவது ஆண்டு நிறைவு (1852 -2002) பாடசாலை, கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்.

- மென்பந்து கிரிக்கட்
- உதைபந்தாட்டம்
- வலைப்பந்தாட்டம்
- கரப்பந்தாட்டம்
- தாச்சி போட்டி (13வயது)
- சைக்கிளோட்டம் (ஆண்,பெண்)
- மரதன் ஓட்டம் (ஆண்,பெண்)
- கூடைப்பந்தாட்டம் (ஆண்,பெண்)
- ஹொக்கி போட்டி (ஆண் - கழகம்)

*விண்ணப்ப முடிவு திகதி : 15.01.2002*

*மேலதிக விவரங்களுக்கு கல்லூரி அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.*

S.K. தங்கவடிவேல்,
செயலாளர்,
விழாச் சபை.
(96135)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### ஏழாலை அம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்.

எமது ஆலயப் புனரமைப்புக்காக ரூபா இரண்டு லட்சத்தை ஒதுக்கி அதில் ஒரு லட்சம் ரூபாவைத் தந்துதவிய,



எமது மதிப்பிற்குரிய
முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

ஈ.பி.டி.பி.அமைப்பாளரும்,
வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவருமாகிய
**திரு. K. கமலசேகரம்**
(பாபு)
அவர்களையும்



*மனப்பூர்வமாக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஏழாலை அம்பலவாணேஸ்வரர்
தேவஸ்தான தர்மகர்த்தா சபை.
(96099)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 06 - 1947

மறைவு 02 - 12 - 2000

### திருமதி சிவஞானம் அருமைநாயகம்

திதி: சஷ்டி

*ஆண்டு ஒன்று கழிந்தாலும்*
*ஆழ்ந்த துயரம் ஆறவில்லையே*
*அம்மா, எம் கவலைகளை*
*காலம்தான் ஆற்ற வேண்டும்!*

*குமாரு - அருமைநாயகம்,*
*"சிவஞானம் ஓட்டோ சேவை",*
*ஆஸ்பத்திரி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

கணவர்,
பிள்ளைகள்.
(96148)


## விற்பனைக்கு

*2002 ஆம் ஆண்டுக்கான வண்ண வண்ணக் கலண்டர்களும் மற்றும் மனேஜ்மன்ற், டெஸ்க் டயறிகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.*

**சிவா நகைமணி பூங்கா**

288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2567
(99137)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 - 02 - 1931

உதிர்வு 16 - 12 - 1996

### அமரர் வி.எஸ்.குணசிங்கம்

திதி: 21-12-2001

அப்பா!
திரும்ப ... திரும்ப ... உயிர்க்கும்
உங்கள் நினைவுகள்
நகர்ந்து செல்லும் எம் வாழ்வுப் பாதையில்
நல்லவற்றை எமக்குக் காட்டி நிற்கும்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*16, சிவகுருநாதர் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(96139)

## 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 10 - 03 - 1929

மறைவு 21 - 11 - 2001

### அமிர்தவல்லி பசுபதிப்பிள்ளை

(சரவணை)

இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*
*T.P: 070- 212676.*

ந.இளங்கோ *(மருமகன்)*
இ.வசந்தா *(மருமகள்)*
(C/19862)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 - 02 - 1937

உதிர்வு 21 - 12 - 1987

### அமரர் சீ.செல்லத்துரை

(முன்னாள் மேற்பார்வையாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

பாச நெஞ்சங்களைப் பரிதவிக்க
- வீட்டுச் சென்று
பதின்னான்காண்டானதுவோ.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

*"ஈஸ்வரி வாசம்"*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*
(96141)

### குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும்

# பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தாவிடில் எதிர்ப்பு நடவடிக்கையில் மக்கள் ஈடுபடுவார்கள்

## யாழ்.அரச அதிபருக்குப் புதிய ஜனநாயகக் கட்சி மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.21

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்கின்றன. இந்த விடயத்தில் அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் மக்கள் ஒன்றிணைந்து அடுத்த கட்ட எதிர்ப்பு நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிரதேசக் குழுவினர், அரச அதிபரிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் காலை யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியபின் அவரிடம் கையளிக்கப்பட்ட இந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் பொருள்களின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. குடாநாட்டு வர்த்தகர்கள் மத்தியில், பதுக்கல், கள்ளச் சந்தை ஆகியன தலைதூக்கத் தொடங்கியுள்ளன. இவற்றால் சாதாரண பொதுமக்கள் தமது வாழ்வில் அன்றாடம் பல்வேறு துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

மக்களது அன்றாட உணவில் முக்கிய இடத்தை வகித்துவரும் கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளதுடன், பதுக்கல் காரணமாகச் செயற்கைத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

### எரிபொருள் 'புதிர்'

இவ்வாறே மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகளும் கள்ளச் சந்தையில் பலமடங்காக உயர்த்தப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள முடியாத எரிபொருள்கள் கள்ளச சந்தைக்கு எவ்வாறு வருகின்றன என்பது புதிராகவே உள்ளது.

இத்தகைய தட்டுப்பாடுகளுக்கு அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலா அல்லது மொத்த வியாபாரிகளின் பதுக்கல் நடவடிக்கையா காரணம என்பது தெளிவுபடுத்தப்படவேண்டிய விடயமாகும்.

அரசாங்கத்தின் உயர்நிலை பிரதிநிதி என்றவகையில் தொடரும் யுத்தத்திற்கு மத்தியில் குடாநாட்டில் பொருள்களின் விலைகள் உயர்வு, தட்டுப்பாடு என்பவற்றுக்குப் பரிகாரம் காணவேண்டியது தங்களின் அவசிய, அவசர கடமை என நம்புகிறோம்.

இதன் காரணமாகவே மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலை உயர்வுகள், தட்டுப்பாட்டு நிலைகளுக்கு உடனடியாக முடிவு காணப்படவேண்டும் என்று எமது கட்சி வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இந்தவிடயத்தில் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும தவறும் பட்சத்தில் மக்கள் ஒன்றிணைந்து அடுத்தகட்ட எதிர்ப்பு நடவடிககையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்பதையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க-6)

# பேச்சுக்களுக்கு உதவ தனியான குழு அமைப்பு!

## பிரதமருக்கும் ஆலோசனைச் சபை

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் விடயத்தில் பிரதமருக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனைச் சபை ஒன்றும் -

சமாதானப் பேச்சுக்களுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென தனியான குழு ஒன்றும் -

விரைவில் அமைக்கப்படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத் திட்டங்களில் இந்த இரு அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் அமைச்சர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் தனது இந்த சமாதானத் திட்டத்தை பிரதமர் விளக்கிக் கூறினார்.

பிரதமரின் ஆலோசனைச் சபையில் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் உள்ளடக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர வேறு மாற்றுத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து அவற்றைத் தயாரிக்க ஒரு செயற்குழு அமைக்கப்படும். சமூகத்தின் சகல பிரிவினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அனுபவம் வாய்ந்த பிரமுகர்கள் இக்குழுவில் இடம்பெறுவர். (ம)

# கொலைச் சந்தேக நபரும் எம்.பியாகப் பதவியேற்றார்!

கொழும்பு,டிசெ.21

நேற்றுமுன்தினம் பதவி ஏற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கொலைச் சந்தேகநபர் ஒருவரும் அடங்குகிறார்.

பொ.ஐ.முன்னணியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.திஸநாயக்கவே பதவி ஏற்றுக் கொண்ட கொலைச் சந்தேகநபராவார்.

கொலை மற்றும் வன்செயல்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர், சிறைக் காவலர்களின் பாதுகாப்புடனேயே நாடாளுமன்றத்துக்குச் சென்றார்.

இவ்வாறு கொலைச்சந்தேக நபரொருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்றுக்கொண்டது இலங்கையின் வரலாற்றில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.(ஐ-4)

## தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி

வடக்கு, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தப்படவுள்ள தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் இப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களைத தயாரித்து நல்லூர்ப் பிரதேச செயலாளருக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி நல்லூர் பிரதேச செயலாளர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார். (க-86)

## வல்லைப் பகுதி பரவைக் கடலில் இறால், நண்டு!

தொண்டமனாறு - வல்லைக் குடா பரவைக் கடலில் மாரிமழையை அடுத்து வெள்ளை இறால், சருகல் இறால், நண்டு, சிறுமீன் வகைகள் - கண்டி அமைத்தும், வலை வீசியும தாராளமாகப் பிடிக்கப்படுகின்றன. காலையிலும மாலையிலும் கணிசமான அளவு பிடிக்கப்படும் மீன் வகைகள் காலையில் அச்சுவேலிப் பொதுச் சந்தையிலும், பிற்பகலில் தவறணைக்கு அருகிலும் விற்பனை செய்யப்படுகின்றன.(க-11)

## வாசகர் திருமுகம்

### வீதிகள் எங்கும் நாய்களின் மலம்; இந்த நிலை என்று மாறுமோ...?

யாழ்.குடாநாட்டு வீதிகள், தெருக்கள் நோய்க்கிருமிகள், உயிராபத்து மலிந்த வீதிகளாக மாறிவிட்டன. இவற்றிற்கெல்லாம் காரணம் கட்டாக் காலி நாய்களே.

தினமும் காலையில் தெருக்கள், வீதிகளில் நாய்களின் மலம் முழத்துக்கு முழம் நிறைந்து காணப்படுகிறது. கட்டாக்காலி நாய்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளைத் தமது வாழ்விடமாகப் பயன்படுத்துவதைச் சர்வசாதாரணமாகக் காணமுடிகிறது. இதனால் மனித வாழ்வைப் பாதிக்கும் பாதிப்புக்களோ ஏராளம். நாய்கள் இவற்றை அறியுமா? நாய் வளர்ப்போர்தான் இவற்றை அறியவேண்டும்.

தெருவில் காணப்படும் நாய்களின் மலங்களைப் பாதசாரிகளான மாணவர்கள், முதியோர்கள் மிதித்துச் செல்லவேண்டி ஏற்படுகிறது. தெருக்களில் காணப்படும் நாய்களின் மலமும, நோய்க்கிருமிகளும் வாகனங்களின் சில்லுகளால் மாலையாவதற்குள் சுத்தம் செய்யப்பட்டுப் பல்வேறு இடங்களுக்கும் காவிச் செல்லப்படுகின்றன.

அத்துடன் தற்போது மழைகாலம் ஆகையால் மழைநீரினால் மலக் கழிவுகள் கழுவப்பட்டுப் பல்வேறு வழிகளிலும் நோய்க்கிருமிகள் காவிச் செல்லப்படுகின்றன. இவ்வாறு தேங்கிநிற்கும் நீர் வாகனங்களால் தெருவில் போவோர்மீது விசிறப்படுகிறது.

அதேவேளை -

வீதிகளில் திரியும் நாய்கள் வாகனங்களுக்குக் குறுக்கே ஓடுவதால் ஏற்படும் விபத்துக்கள் தற்போது அதிகரித்துள்ளன. அத்துடன் பாதசாரிகள், வாகனத்தில் செல்வேரைத் துரத்திச்சென்று கடிக்கும் நாய்கள் ஒருபுறம். இவ்வாறாகக் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் உயிராபத்துக்கள் பலவாகும்.

இவற்றைப் பொறுப்பானவர்கள் கவனத்திற்கு எடுத்து, போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ள தெருக்களை நாய்களின் தொல்லைகளில் இருந்து மீட்க முன்வரவேண்டும். சிங்கப்பூர்த் தெருக்களில் 'ரொபி' கடதாசி ஒன்றுகூடப் போட்டால் தண்டம் கட்டவேண்டும் என அறிகிறோம். ஆனால் இங்கு நிலை வேறாகவுள்ளது.

நாய் வளர்ப்போர் அவற்றைக் கூடுகளில் அடைத்து அல்லது கட்டி வளர்ப்பார்களாயின் மேற்குறிப்பிட்ட பாதிப்புக்களை இல்லாமற் செய்து எமது சூழல் மாசடையாது பேணுவதுடன் நாமும் நோய்க்கிருமிகள், உயிராபத்துக்கள் என்பவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

*மானிப்பாய்.* **க.கனகேஸ்வரன்.**

### மண்ணெண்ணெய் விநியோகம் முதல் அனைத்திலும் ஊழல்...! ஊழல்....!!

தேர்தல் காலங்களில் கப்பலில் மண்ணெண்ணெய் வருகிறது என்றும், டீசல் ஏற்றிவந்த கப்பல் திருமலைக்கு மண்ணெண்ணெய் ஏற்றச் சென்றதாகவும், அடுத்த வாரம் சகஜநிலைக்குத் திரும்பிவிடும் என்றும் அறைகூவல்களும், அறிக்கைகளும் விட்ட அரசியல் கட்சிகள் இன்று மண்ணெண்ணெய் இல்லாது மக்கள் தவிப்பதைக் கண்டுகொள்ளாதவைகளாகச் செயற்படுவது ஒவ்வொரு தமிழனின் மனதையும் வேதனைப் படுத்தியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளுக்கு ஒருபரல் மண்ணெண்ணெய் கொடுத்து முன்னுரிமை அடிப்படையில் நபருக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கும்படி கேட்கப்பட்டது. ஆனால் முன்னுரிமை அடிப்படையில் முன்னுக்கு உள்ள கள்ளமார்க்கட்டுக்கு மண்ணெண்ணெய் சென்றுவிடுவதுதான் உண்மை. இது இன்று ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. சீரான விநியோகம் இல்லாது எல்லாமே தில்லுமுல்லுத்தான்.

இன்று தனியார் கடைகளில் 60 ரூபாவுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விற்பதற்கு எங்கிருந்துவந்தது? தனியார் கடைகளில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யக் கூடாது என்ற சட்டம் எங்கே போய்விட்டது? யாழ். மாவட்டத்தில் உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை ஒரே ஊழல் மயம்.

ஓர் அரசியல் கட்சி ஆலயப் புனரமைப்பு எனக்கூறித் தனது விளம்பரங்களைப் பத்திரிகைகளில் படரவிடுகின்றது.

மற்றோர் அரசியல்கட்சி 1948ஆம் ஆண்டு தொடக்கம் தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்தவர்கள் என்றும் அஹிம்சைப் போராட்டம், மக்கள் போராட்டம் எனப் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு சங்கீதக் கதிரையில் வெற்றிபெற்று கொழும்பில் கொண்டாட்டம் போடுகின்றது.

இன்று மக்கள் படும் வேதனையை இவர்கள் அறியாதவர்களல்லர். அடுத்த தேர்தலுக்கு இவர்கள் வருவார்கள். மக்கள் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். மண்ணெண்ணெய் இல்லாது மாணவர்கள் படும் வேதனையை யார் துடைப்பது?

*திருநெல்வேலி கிழக்கு.* **கோ. புவனேந்திரன்.**

# ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தேனினும் இனிய திருவெம்பாவைப் பதிகம்

தமிழிலக்கியத்தின் தகைமைக்குத் தலையாய எடுத்துக்காட்டாக விளங்கும் திருவாசகம் தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களுள் மிக உன்னத நிலையை வகிக்கின்றது.

ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலகெலாம் உய்த்து உணர்ந்து ஓதற்கரியவனை எம் உள்ளத்தில் இருத்தி, எல்லையற்ற உவகைப்பேற்றினைத் தரும் திருவாசகம் தமிழ் மக்களை மட்டுமல்ல, உலகப் பேரறிஞர்களையே தன்பால் ஈர்த்துள்ளது.

### விழிநீர் வழிந்தோடச்செய்யும் நூல்

இந்த அரும்பேற்றினைத் திருவாசகம் பெற்றதனால்தான் வேதத்தை வென்று, வேதமோதும்போது எம் விழிநீர் பெருகாநிற்கத் தன்னை ஓதும்போது எம் நெஞ்சத்தை நெக்குருகச்செய்து, எம் விழிகளில் நீர் பெருவெள்ளம் எனப் பெருகச் செய்கிறது. இதனால்தான்போலும் "மலங்கெடுத்து மனங்கரைக்கும்" இத்திருவாசகத்துக்குத் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த மறைமலை அடிகளார் தமக்கேயுரிய விழுமிய தனி நடையில் "திருவாசகத்தை ஓதியும் உருகாத ஓர் உயிர் இருக்குமாயின் அதனைக் கல்லென்று கழறுதுமோ அன்றி மண்ணின்றி வகுத்துமோ, இரும்பென்று இயம்பதுமோ, சொன்மின்காள்" என்று இயம்பியுள்ளார்.

**ஞானக்கதிர்**

### மும்மலத்தின் முடிச்சறுக்கும்

"பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என மங்கை மணவாளனே மணிவாசகரை வேண்டியது, திருவாசகத்தில் திருவெம்பாவைத் தனிச் சிறப்புடன் விழங்குகிறதென்பதை எடுத்துக்காட்டுகிறது. 51 பதிகங்களில் ஒரு பதிகமாக விளங்கும் திருவெம்பாவை 20 பாடல்களின் உள்ளடக்கமாக விளங்குகிறது.

இப்பதிகம் இறையருள் தோய்ந்த இன்பத் தமிழ் ஊற்றாகப் பெருக்கெடுக்கிறது.

## இன்று திருவெம்பாவை ஆரம்பம்

'நான' என்ற செருக்கில் அழுந்தி, ஊழ்வினையால் உறுக்கப்பட்டு, நிலையற்ற இவ்வுலகை நிலையானது என்று மயங்கும் எம் அறிவற்ற நிலை ஆகிய மூன்று நிலைகளில் இருந்து நீங்க (ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலப் பிணிப்பிலிருந்து விடுபட) மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் 'கன்னிகள்' ஆகிய எம் ஆன்மாக்களைத் துயிலெழுப்பி அம்மை அப்பனாய் - சிவசக்தியாய் விளங்கும் இறையருள் என்ற இன்பப் பொய்கையில் மூழ்கி தோற்றமும் ஒடுக்கமுமற்ற - முதலும் முடிவுமற்ற - ஆதியும அந்தமுமற்ற அரும்பெரும் ஒளியில் - அருட்சோதியில் எம்மை இரண்டறக் கலக்கச்செய்கின்ற அருட்பெரும் அருந்தமிழ் ஊற்றே மணிவாசகரின் தித்திக்கும் திருவெம்பாவைப் பாடல்களாகும்.

எத்திக்கும் புகழ் மணக்கும் இத்தித்திக்கும் திருவெம்பாவைப் பாடல்கள் கற்றோர்க்கும் கல்லாத மற்றோர்க்கும் களிப்பருளும் களிப்பாய் விளங்கிக் கடல் கடந்த நாடுகள் எங்கும் பரவி 'தமிழ் மந்திரம்' என உலகத்தார் உவந்து போற்றும் பேற்றினைப் பெற்றுள்ளது.

### உலகியல் வாழ்விற்கும் உகந்தது

எம் ஆன்ம நாயகனாகிய ஆண்டவனைக் 'கன்னிகள்' ஆகிய எம் ஆன்மாக்கள் மும்மலங்களில் இருந்தும் விடுபட்டு இறையருள் என்ற இன்பப் பொய்கையில் மூழ்கி வீடு பேறுபெறச் செய்வதே இப்பாடல்களின் மெய்விளக்கம் - தத்துவம். எனினும், உலகியல் அடிப்படையில் பார்க்கும்போது நாட்டின் நலம் நாடி நன்மழை வேண்டும் என நங்கைகள் நற்றமிழில் விடுத்த வேண்டுகோள் சமுதாய நலனில் - கூட்டுறவு வாழ்வில் - நம் நற்றமிழ் வாசகருக்கு இருந்த நாட்டத்தையும் நாம் நன்கு அறியத்தக்கதாய் இருக்கிறது.

### நங்கைகளுக்கு நவிலும் நல்லுரை

திருவெம்பாவைப் பாடல்களில் 'உன்னடியார்கள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம்கணவராவார் அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம்' என்ற அடிகளும்,

மற்றும் -

"எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க, எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க" என்றுவரும் அடிகளும் -

**ஈழவேந்தன்**

மணிவாசகப் பெருந்தகை மங்கையருடாக விடுக்கும் வேண்டுகோளானது இன்று நம்மிடையே வாழும் மங்கையர் நல்லவர்க்கும் பொருந்தும் பொருள் பொதிந்த பொன்னுரையாகவென்றோ விளங்குகிறது! நாம் வேண்டியவாறு வேண்டியதை விருப்போடு தரும் விமலனை 'வெந்துயர் தீர்க்கும் வேந்தன் அடி வெல்க' என வாயார வாழ்த்தி, நித்தலும் அவன் திருவடி தொழுது நிலமிசை நீடு புகழுடன் நிறைவாழ்வு வாழ்வோமாக! ★

# நன்றி கலந்த பாராட்டு



## வீ.ஜோ. பாலசிங்கம்

ஆகியயான் இலங்கை மின்சார சபையில் (வடக்கு) சேவை ஆற்றிய காலத்தும், சேவையின் போது விபத்துக்குள்ளாகி, எனது வலது கையை இழந்து, யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வேளையிலும், எனக்கு அன்பும் ஆதரவும் தந்து உளமார நேசக்கரம் நீட்டிய, மின்சார சபையின் பிரதேச முகாமையாளர், மின் பொறியியலாளர், மின் அத்தியட்சகர்கள், என்னுடன் பணியாற்றிய மின்சார சபை ஊழியர்கள், நண்பர்கள் அனைவருக்கும், ஓய்வு பெற்ற இவ்வேளையில் எனது இதய பூர்வமான நன்றிகளையும், பாராட்டுகளையும், பணிவன்புடன் தெரிவிப்பதில் பெரும் உவகையடைகின்றேன்.

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று"* - வள்ளுவன் வாக்கு.

*உங்கள் அன்பன்,*
வீ.ஜோ.பாலசிங்கம்.

*நிரந்தர முகவரி:-* நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (96134) *தற்காலிக முகவரி:-* அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

---

செவிப்புலன் வலுவற்றோர் புனர் வாழ்வு நிறுவனம்
(கிறிஸ்தவக் கழகம் நடத்தும்)

# வருடாந்த நத்தார் விழா

காலம்: நாளை (22.12.2001) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு.

இடம்: சீனியோன் மண்டபம்.

பரிசில் வழங்கலும் இடம்பெறும்

இவ்விழாவிற்குத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம். செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் வருடாந்த நத்தார் விழாவுக்காக நிதியுதவி வேண்டித் தங்களிடம் வந்தபோது, இல்லையென்று கூறாது பண உதவி செய்த அனைத்து அன்பர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

த. அன்ரனியம்மா, *தலைவர்.* அ. சகாயமேரி, *செயலாளர்.*

No: 16/2 சீனியர் ஒழுங்கை, கலட்டி வீதி, யாழ்ப்பாணம். (96136)

---

# நன்றி மறவாமை

வட்டுத் தெற்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய திருப்பணி வேலைகளுக்கு முதற்கட்டமாக ரூபா 50,000/- வழங்கிய,



முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான
உயர்திரு. **K.N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
உயர்திரு. **கே.வி.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்



வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக் கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமாகிய
உயர்திரு. **ந.திரிலோகநாதன்**
அவர்களையும்

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர், வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டை. (96133)

---

## பிரான்ஸிலிருந்து கோழிக்குஞ்சுகள்

அச்சுவேலி டிசெ.21

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு பிரான்ஸ் நாட்டிலிருந்து இரண்டாயிரம் "அபேட்" இன கோழிக் குஞ்சுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கிராமியக் கூட்டுறவு வங்கிகளின் சமாஜத்தினால் நிர்வகிக்கப்படும் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தில் வளர்த்து இனவிருத்தி செய்வதற்கு ஆயிரம் முட்டைக் கோழிக் குஞ்சுகளும் ஆயிரம் புறொயிலர் (இறைச்சி) இனக்கோழிக் குஞ்சுகளும் வரவழைககப்பட்டுள்ளன.

1999ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தாய்க்கோழிகள் முதிர்ச்சிப் பருவம் அடைந்து கழிக்க வேண்டிய நிலையில் இருப்பதால் புதிய கோழிக்குஞ்சுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. (க-11)

## அதிபர் பதவி வெற்றிடம்

அளவெட்டி வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடாசாலை அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற இருப்பதால் மேற்படி பாடசாலை அதிபர் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வலிகாமம் கல்வி வலயத்தினர் கோரியுள்ளனர்.

அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் அதற்குரிய படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக வலயக் காரியாலயத்தில் சேர்ப்பிக்குமாறு வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (க-152)

## யாழ்.பல்கலைக்கு பதிவாளர் நியமனம்

யாழ்பல்கலைக் கழகத்தின் புதிய பதிவாளராக திருமதி ஆர்.தங்கராசா கடந்த 18ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1999ஆம் ஆண்டின் இறுதியில் கலாநிதி க.குணராஜா பதிவாளர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து பதில் பதிவாளராகக் கடமையாற்றி வந்த இவர், தற்போது நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்.

இந்தப் பதவி வெற்றிடத்திற்கான நேர்முகத் தேர்வில் 4 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## மற்றொரு சந்தேக நபரும் கைது!

யாழ்ப்பாணம்,டிசெ.21

இணுவில் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மேலும் ஓர் இளைஞரை, சுன்னாகம் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இணுவில் துரை வீதிச் சந்திக்கு அருகில் உள்ள நகைக்கடை ஒன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவரே இந்தத் துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவச் சீருடையுடன் ஆயுதம் தாங்கிய ஒருவரே கடை உரிமையாளரை ஆயுதத்தைக் காட்டி மிரட்டி விட்டு சுமார் 45ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் 5 பவுண் நிறையுடைய நகையையும் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் வந்த மற்ற இருவரில் ஒருவரை பொதுமக்கள் தப்பியோட முற்பட்ட சமயம் மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலீஸில் ஒப்படைத்திருந்தனர்.

அவரை விசாரணை செய்த சுன்னாகம் பொலீஸார் அவருடன் நின்று தப்பியோடிய மற்றைய இளைஞரையும் கைது செய்துள்ளனர்.

ஆயுதத்துடன் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடியவரை இதுவரை பொலீஸார் கைது செய்யவில்லை. (க-6)

---

### அறிவித்தல்

மட்டுவில் வடக்கில் இயங்கி வந்த எனது சுகவாச வைத்தியசாலை தற்போது கீழ்க் காணும் முகவரியில் நடைபெறுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். (C/19863)

**டாக்டர் பே.எட்வேட்**
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

---

# இலவசம்

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு நத்தார் - புதுவருட வாழ்த்துக்களை e-mail மூலம் தெரிவிக்க நாடுங்கள்.

**SRI MURUGAN COMPUTER SYSTEM,**
**303, K.K.S. ROAD, JAFFNA.**
**T.P.: 021-2670, FAX: 021-3214**
(C/19851) **e-mail: del-smskr@eureka.lk**

---

# ஓராண்டின் நீங்கா நினைவலைகள்



தோற்றம்: 31 - 08 - 1938
மறைவு: 01 - 01 - 2001

## திருமதி சிதம்பரநாதன் திலகவதி

திதி:21.12.2001

அம்மா!
*பாசத்தின் சுமையோடு*
*கணப்பொழுதில் மறைந்தாய் அம்மா!*
*ஆறாத வேதனையில்*
*ஆண்டொன்று சென்றதம்மா!*
*மீளாத நினைவு தன்னில்*
*நெஞ்சம் தவிக்கு தம்மா!*
*இறைவனுடன் சேர்ந்தெம்மை*
*வழி நடத்த வேண்டுகிறோம்.*

*தற்காலிக முகவரி:-* கண்டாவத்தை, கரவெட்டி மத்தி, கரவெட்டி. (96106)
உங்கள் பிரிவால் வாடும்: **கணவன், பிள்ளைகள்.**
*நிரந்தர முகவரி:-* கச்சாய் வீதி, சாவகச்சேரி.

---

# 41ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு: 02 - 10 - 1936
இறப்பு: 11 - 11 - 2001

## திருமதி சின்னையா கனகம்மா

*எம்மைவிட்டேகியம்மா நாற்பத்தொரு நாளாச்சே*
*தூங்கா விழியோடு துடிக்கின்றோம் துயரத்தால்*
*தாங்குதற்குத் தூணற்ற மனையாக எம்வாழ்வு*
*ஏங்கியிருந்த மண்ணதனில் எந்நாளும் கழியுதம்மா!*

நின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.*
பிரிவால் துயருறும்: சரஸ்வதி ஜேம்ஸ் குடும்பத்தினர். (96118)

---

# 46ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 03 ☆ 12 ☆ 1940
உதிர்வு: 06 ☆ 11 ☆ 2001

## கார்த்திகேசு கந்தையா

*(உரிமையாளர் நியூ தேவி சலூன் - ஆடியபாத வீதி, திருநெல்வேலி.)*

எமது அன்புத் தெய்வமே! உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன் (மனைவி).

*எம்.எஸ்.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.* (96029)
பிரிவால் துயருறும் திருமதி க.செல்லம்மா (கிளி?) (மனைவி)

# உதயன்

## யுத்தநிறுத்தம் சமாதானத்துக்கான அறிகுறி

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக புதிய அரசு தனது நம்பகத்தன்மையை - நல்லெண்ணத்தை - வெளிக்காட்டும் விதத்தில் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை விரைவில் வெளியிடலாம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்று திரும்பியதும் - 24 ஆம் திகதிக்குப் பின்னர் - இந்த அறிவிப்பு வெளிவரலாம்." - என்ற செய்தி வெளியான கையோடு புலிகள் தரப்பிலிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைத்திருக்கின்றது.

சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக டிசெம்பர் 24 ஆம் திகதி முதல ஜனவரி 24 ஆம் திகதிவரை பண்டிகைக் காலத்தில் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் முந்திக்கொண்டு அறிவித்திருக்கின்றனர்.

புதிய அரசுக்கு சமாதானத்துக்கான நேசக்கரம் நீட்டித் தாங்கள் விடுத்திருக்கும் சமிக்ஞைக்கு ஸ்ரீலங்காவின் புதிய அரசு சாதகமாகப் பதில் நடவடிக்கை எடுக்குமானால் யுத்தநிறுத்த காலத்தை மேலும் நீடிப்பது குறித்தும் பரிசீலிக்கப்படும் என்றும் புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

இந்த அறிவிப்பில் புலிகள் தெரிவித்திருக்கும் இரண்டு கருத்துகள் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவை.

☆ "தாங்கள் தெரிவுசெய்த தங்கள் பிரதிநிதிகள் மூலம் சமாதானத்தையும் இன ஒற்றுமையையும் இந்த நாட்டில் ஏற்படுத்தத் தமிழ், சிங்கள மக்கள் பொதுத்தேர்தலில் அரசுக்கு ஆணையிட்டிருக்கின்றார்கள்."

☆ "நாம் அனுஷ்டிக்கும் இந்தத் தாக்குதல் நிறுத்தம் நல்லெண்ண அடிப்படையிலும் பேச்சு மூலமான அரசியல் தீர்வில் நாம் கொண்டுள்ள ஆர்வத்தையும் பற்றுறுதியையும் புலப்படுத்தும் நேர்மையான முடிவாகக் கொள்ளப்படவேண்டும்."

- புலிகள் இப்படித் தெரிவித்திருக்கும் கருத்துகளுக்கு அரசும் சர்வதேச சமூகமும் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

இதேபோன்ற ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பை கடந்த ஆண்டு இறுதியிலும் பண்டிகைக் காலத்தில் புலிகள் விடுத்திருந்தனர்.

சமாதான முயற்சிகளுக்கான நல்லெண்ண வாய்ப்பாகப் புலிகள் விடுத்த இந்த அறிவிப்பை அப்போதைய சந்திரிகா அரசு புலிகளின் பலவீனமாகக் கருதி உதாசீனப்படுத்தியது; பலவீனப்பட்டிருக்கும் புலிகளின் முதுகை உடைக்கிறேன் என்று கறுவிக்கொண்டு புதிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்து வாங்கிக்கட்டிக்கொண்டது.

நிலைமை எல்லைமீறி, சந்திரிகா அரசு யதார்த்தத்தைப் புரிந்துகொண்டபோது வாய்ப்புத் தவறிப்போய்விட்டது. குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடி என்ன பயன்?

கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் கோட்டைவிட்டுவிட்டு, "நாங்கள யுத்தநிறுத்தம் செய்து சமாதானப் பேச்சு நடத்தத் தயார்; புலிகள்தான் இணங்கிவர மறுக்கின்றார்கள்!" என்று தேர்தலை அண்டிய காலத்தில அப்போதைய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் திரும்பத் திரும்பக் கூறுமளவுக்கு - வாய்விட்டுக் கெஞ்சாத நிலையில் புலிகளை பேச்சுக்கு அழைக்கும் கட்டாயத்துக்கு - அந்த அரசு தள்ளப்பட்டது. பழைய அரசின் இந்த அனுபவம் தற்போதைய ரணிலின் அரசுக்கு நல்ல பாடமாக இருக்குமென எதிர்பார்க்கலாம்.

புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்புப் பற்றிய தகவல் வெளியான கையோடே அதைப் புதிய அரசு வரவேற்கின்றது என்றும், அந்த அறிவிப்புக்குச் சாதகமான பதிலை அரசு விரைவில் வெளியிடும் என்றும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்திருப்பது, புதிய அரசு இதுவிடயத்தில் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றது என்பதற்கு நல்லதோர் அறிகுறி.

பொதுத்தேர்தலில் பொதுமக்கள் அளித்த - சமாதானத்துக்கான - தீர்ப்பைக் கவனத்தில் எடுத்து, அதைச் செயற்படுத்த இருதரப்பும் இயன்ற வரைவல் நடவடிக்கை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது - ஆறப்போட்டு பழங்கஞ்சியாக்கிக் கெடுப்பதைவிட.

குடாநாட்டில் பல இடங்களிலும்

# நத்தார் பண்டிகைக் காலத்தில் சமாதான வெளிச்சக் கூடுகள்!

யாழ்ப்பாணம்,டிசெ.21

'கியூடெக்' நிறுவன விழிப்புணர்வு குழுக்களின் ஏற்பாட்டில் நத்தார் பண்டிகையையொட்டி சமாதான வெளிச்சக்கூடுகள் ஏற்றப்படவுள்ளன.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்றப்படவுள்ள இந்தச் சமாதான வெளிச்சக் கூடுகள் எதிர்வரும் புதுவருட தினம்வரை தொடர்ந்து எரிய வைக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

முதலாவது சமாதான வெளிச்சக் கூடு ஊர்காவற்றுறையிலும் தொடர்ந்து கரவெட்டி, இளவாலை மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஏற்றி வைக்கப்படும். (க-6)

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு

# சமாதானத்துக்கான அரிய வாய்ப்பு; தக்கவாறு அரசு பயன்படுத்த வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.21

சமாதானத்துக்கு வாய்ப்பான சூழல்கள் சிற்சில சந்தர்ப்பங்களிலேயே கிடைக்கின்றன. அவற்றைத் தவறவிடாமல் தக்கவாறு பயன்படுத்துவது பொறுப்புள்ள அரசின் கடமையாகும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவரும் தமிழர் கூட்டமைப்புப் பிரமுகருமான பிரேமச்சந்திரன் விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கும் யுத்த நிறுத்தம் தொடர்பாக விடுத்திருக்கும அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை முழுத் தமிழ் மக்களும முழுமனதாக வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பானது சமாதானத்தின் மீதும், கௌரவமான தீர்வொன்றின் மீதான அவர்களின் அவாவை துலாம்பரமாக வெளிக்காட்டுகிறது. கடந்த நத்தாரின்போதும் புலிகள் தொடர்ச்சியாக நான்கு மாதம் யுத்தநிறுத்தம் செய்தார்கள்.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் அதற்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்காமல்விட்டதுடன் யுத்த நிறுத்த முடிவில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த முற்பட்டு தனது இராணுவத்துக்கு பேரழிவினை ஏற்படுத்திக்கொண்டது என்பது கடந்த கால வரலாறு.

எனவே கடந்தகால செயற்பாடுகளை நல்ல அனுபவமாக எடுத்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்துக்கு சாதகமாக அரசாங்கமும் பதில் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிப்பதற்கு புதிய அரசாங்கம் முன்வருவதுடன் பேச்சுக்கான சூழலை உருவாக்கவும், ஒரு நல்லெண்ண வெளிப்பாடாகவும் வன்னிக்கான பொருளாதாரத் தடையை முழுமையாக அகற்ற ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசாங்கம் முன்வரவேண்டும்.

சமாதானத்துக்கான சூழல்கள் சில சந்தர்ப்பங்களிலேயே உருவாகின்றன. எனவே அப்படியான சூழல்களைத் தவறவிடாமல் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது பொறுப்புள்ள அரசின் கடமையாகும். அதேசமயம் காலதாமதங்கள் பேரழிவுகளைக்கொண்டதாகவும், பின்விளைவுகளை உருவாக்கும் என்பதையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

ஒட்டுமொத்தமான சிங்கள தமிழ் மக்கள் மாத்திரமல்லாமல் நீண்ட, நெடிய விடுதலைப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானத்தின் மீது தமக்குள்ள அக்கறையை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ள சூழ்நிலையில் அரசாங்கம் இதற்குச் சாதகமான முடிவுகளை எடுத்து பேச்சுக்கான சூழலை உருவாக்க வேண்டும் என்பதுடன் இவ்விடயத்தில் அரசாங்கம் வேகமாகச் செயற்பட வேண்டும் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கோருகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டு நடப்பு

## ஏகினான் இளையகுட்டி

*வண்டியில் புளித்த கள்ளும் வாயாரத் தூஷணமும்*
*நண்டுடன் கிழங்கு சுட்டு நலம்பெறச் சுவைத்த நாவும்*
*கட்டிய வேட்டி கழன்று தொங்க கசிப்பதும் கையில் ஏந்தி*
*இட்டமாய் மனையாள் வீடு ஏகினான் இளையகுட்டி.*

*- விகடகவி.*

## அரியாலையில் முகட்டு ஓடுகள் திருடியவர் கைது!

ஆள் இல்லாத வீட்டில் முகட்டு ஓடுகளை அபகரித்த, அரியாலையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ம.சந்திரகுமார் என்ற நபரே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமராத வீடுகளில் சிற்றுகள், ஓடுகள் மற்றும் மின் உபகரணங்கள் உட்பட வீட்டு உபகரணங்கள் பலவும் நாளாந்தம் திருட்டுப்போவது குறிப்பிடத்தக்கது. (க-86)

# இடம்பெயர்ந்த, மீனவக் குடும்பங்களுக்கு நத்தார் உணவுப் பொட்டலங்கள்!

## 'கியூடெக்' நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.21

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்படாத மீனவர் குடும்பங்களுக்கும் 'கியூடெக்' நிறுவனம் உலா உணவுப் பொருள்களையும், உடுபுடவைகளையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பங்குத்தந்தையர்களுக்கு ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 'சுமார் 500 குடும்பங்களுக்கு தலா 250 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட சுமார் 500 குடும்பங்களுக்கு 450 ரூபா பெறுமதியான உடுபுடைவை பொதிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த இரு திட்டங்களுக்குமாக 'கியூடெக்' நிறுவனம் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (க-6)

நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும்

# புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்

## கொழும்பில் நடந்த நிகழ்வில் ரவிராஜ் எம்.பி

கொழும்பு,டிசெ.21

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அரசாங்கத்துக்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்

- இவ்வாறு யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் என.ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதைக் கௌரவித்து கொழும்பிலுள்ள கைதடி மக்களின் சார்பில் நலன் பேணும் மக்கள் நட்புறவுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு மேற்படி கழகத்தின் கொழும்பு பிரதிநிதி சீ.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வுகாணவேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகின்றோம். தமிழர் கூட்டமைப்பின் சார்பிலே 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த தேர்தலிலே தமிழ்மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எமக்கு ஆணையைத் தந்துள்ளனர்.

மக்கள் தந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு நாம் தொடர்ந்து பாடுபடுவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள முன்வந்தால் நாம் அவர்களிடம் கையளித்துவிட்டு ஒதுங்குவதற்கும் தயாராக இருக்கின்றோம்.

தமிழர் பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் விடுதலைப் புலிகளுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவேண்டும். அவர்களுடன் இது தொடர்பாக நடத்தப்படும் பேச்சுக்களின்போது, தமிழர்களுக்குரிய அதிகாரத்தினை, கௌரவத்தினை அவர்கள் தேடித்தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

தென்மராட்சி மக்கள் மீளக்குடியமர்வதற்கு விடுதலைப் புலிகளிடம் இருந்தும் ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டும். அதன் பின்னரே அங்கு மீளக்குடியமர்வு சாத்தியப்படும்.

சலுகைகளை காட்டியோ, நிவாரணங்களை வழங்கியோ அங்கு மக்களை மீளக் குடியமரச்செய்வது தற்பொழுதுள்ள சூழலில் அவர்களைக் கொலைக்களத்துக்கு அனுப்புவதற்குச் சமமானது.

தீவகம் மற்றும் தென்மராட்சி பிரதேசங்களின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பாளராக, கட்சியினால் நியமனம் செய்யப்பட்டுள்ளதினால் இந்தப் பிரதேசங்களில் உள்ள கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் மாதத்தில் ஒரு தடவையேனும் விஜயம் செய்து மக்கள் குறைகளைக் கேட்டறிந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பணிகளிலே ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளேன் - என்றார்.

கழகத்தின் சார்பில் செல்லத்துரை, இரத்தினசாமி ஆகியோர் பாராட்டுக்களை வழங்கினார்கள். (க)

## அமைச்சுகளுக்கு ஒரு வாகனம் மட்டுமே

கொழும்பு,டிசெ.21

செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் புதிய அரசின் அமைச்சர்களுக்கு தலா ஒரு வாகனம் மாத்திரம் பயன்படுத்த அனுமதிப்பது என ஐ.தே.கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

'நாட்டுமக்கள் எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் எமக்கு ஆட்சியை வழங்கியுள்ளனர். இது எமது வெற்றியின் ஆரம்பம் மட்டுமே. நாம் ஒரு தடவையல்ல, இரு தடவையல்ல தொடர்ந்தும் வெற்றிபெற வேண்டும்" என ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### நாளை

மார்கழி 07
சனிக்கிழமை
திதி : ஸப்தமி
நண்பகல் 12.04 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
மாலை 5.50 வரை.
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 3.25 - 4.55
ராகுகாலம் : 9.25 - 10.55
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பெருமைபெற விரும்புகிறவன், பெருமைக்குரிய காரியம் எது எனத் தேடியலைந்து செய்யக் கூடாது. உள்ளத்தில் பட்ட நல்ல காரியத்தைச் செய்வதே பெருமை.

# பேராயர் ஜெயநேசனுக்கு லண்டனில் பேரறிஞர் விருது

யாழ்ப்பாணம்,டிசெ.21

தென்னிந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ் ஜெயநேசன் அடிகளுக்கு இங்கிலாந்து கேம்பிறிட்ஜ் நகரில் அமைந்துள்ள அனைத்துலக வரலாற்றாய்வாளர் நிறுவனம் பேரறிஞர் விருது வழங்கியுள்ளது. இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாயிரம் தலைசிறந்த அறிஞர்கள் பட்டியலில் பேராயர் ஜெயநேசன் அவர்களையும் சேர்த்துள்ளது. சமயம், தத்துவம், ஆகிய துறைகளில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், எழுதிய கட்டுரைகள், நூல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே அனைத்துலக வரலாற்றாய்வாளர் நிறுவனம் இவ்விருதுக்கு அவருடைய பெயரைத் தெரிந்துள்ளது.



பேராயர் ஜெயநேசன் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த சொற்பொழிவாளர் அவர் எழுதிய நூல்களில், அமெரிக்க பேராசிரியர் நிச்சேட் யங் அவர்களுடன் இணைந்து எழுதிய "பத்தொன்பதாம் நூற்றாண்டு சமயச் சர்ச்சைகள்" என்பது பலரின் பாராட்டுதலைப் பெற்றது. பல மேனாட்டு கல்லூரிகளில் ஆழ்ந்து கற்கப்படுகிறது.

பேராயர் அவர்கள் சமயம், தத்துவம் என்பதில் மட்டுமன்றி தமிழ் இலக்கியத்திலும், தமிழர் உரிமைப்போராட்டத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். கடந்த பத்து வருடங்களாக அவர் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகப் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பெருந்தொகை நிதி விரயம்!

## விசாரிக்கக் குழு அமைப்பு

கொழும்பு,டிசெ.21

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்றுள்ள 2,200 கோடி ரூபா விரயம் தொடர்பாக அதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகளை அமைச்சர் கரு ஜயசூரிய ஆரம்பித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தஹம் விமலசேனவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு, விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் விரயமாக்கப்பட்டுள்ள இந்த நிதியை மீளச் செலுத்தாவிடின் கூட்டுத்தாபனத்திற்குக் கடன் வழங்கிய இரு வங்கிகள் முறிவடைய நேரிடும் என அமைச்சர் கரு ஜயசூரியா எச்சரித்துள்ளார்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய அமைச்சர்கள் நாட்டின் நிதி நிலைமை குறித்து ஆராய்ந்த போதே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற இந்தப் பெருந்தொகையிலான விரயம் தெரியவந்துள்ளது. (ஐ)


## துயர் பகிர்கிறோம்

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலய பரிபாலன சபைச் செயலாளரும், இந்து இளைஞர் மன்ற உறுப்பினரும், எமது பிரதேச 'உதயன்' செய்தியாளருமான

திரு.பா.நந்தகுமார்

அவர்களின் அன்புத் தந்தையார்

**சுவாமிநாதர் பாலசிங்கம்**

*(ஓய்வுபெற்ற ஊழியர், பலாலி - கட்டுநாயக்கா விமானநிலையம்)*

அவர்கள் நேற்று இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கொழும்புத்துறை மேற்கு
வதிரிபீட விநாயகர் ஆலய பரிபாலன சபையும்,
இந்து இளைஞர் மன்றமும்.

(96151)


# விலங்கு உயிர் அணுக்களைப் பேண நவீன குளிரூட்டி விரைவில் கிடைக்கும்

## ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் வழங்கும்

குடாநாட்டில் கால்நடைகளை செயற்கைமுறை மூலம் சினைப்படுத்துவதற்குத் தேவையான விந்து (உயிர்) அணுக்களை வருடக் கணக்கில் பழுதுபடாமல் சேமித்து வைப்பதற்கான திரவ நைதரசன் குளிரூட்டி இயந்திரம் ஒன்றினை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம் யாழ்.மாவட்ட கால்நடை செயற்கை முறைச் சினைப்படுத்தும் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

15 லட்சம் ரூபா பெறுமதியான இந்த திரவ நைதரசன் குளிரூட்டி இயந்திரம் மூலம் தரமான காளைகள் மற்றும் கடாக்கள் மூலம் பெறப்படும் விந்து வகைகளை நீண்ட காலம் பழுதடையாமல் சேமித்து வைத்துத் தேவைக்கேற்ப பயன்படுத்த வசதி கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது காளைகள் மற்றும் ஆட்டுக் கடாக்களில் இருந்து பெறப்படும் விந்து தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியவை வீணே அழிக்கப்படுகின்றன.

குளிரூட்டி வசதி இல்லாத காரணத் தினாலேயே இந்த நிலைமை இருந்து வருகிறது.

புதிய திரவ நைதரசன் குளிரூட்டி கிடைக்கப் பெற்றால் கால்நடைகளின் விந்துகளை நீண்ட காலம் சேமித்து வைத்து செயற்கை முறைச் சினைப்படுத்தல் நடவடிக்கையினை மேலும் விரிவுபடுத்த முடியும் என்று யாழ்.மாவட்ட கால்நடை செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)


## இதய அஞ்சலி

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாயில் முழுநேர அலுவலராகப் பணியாற்றி இறைபதம் அடைந்துள்ள எமது 'பிக்அப்' சாரதி

**செல்வநாயகம் மகேந்திரன்** (சமூகசேவையாளன்)

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து,
ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
சாந்தி! சாந்தி!சாந்தி!

*வெ.அ.ஜோன்சன், ஜே.பி.யு.எம்.,*
தலைவர், செயலாளர், சபை உறுப்பினர்கள்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

*வலிகாமம் தென்மேற்கு*
*பிரதேச சபை,*
*மானிப்பாய்.*

(C/19865)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## மீள்கேள்வி அறிவித்தல் - 2002ஆம் ஆண்டு

**31-10-2001ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக்கடைகள் ஆகியன குத்தகைக்கு மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.**

**கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி(இறுதித் திகதி) - 2001.12.27 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை**
**கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2001.12.28 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை**
**கேள்விகள் திறக்கப்படும் திகதி - 2001.12.28 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு.**

| குத்தகை விவரம் | மாதவாடகை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத்தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **01. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 01) மானிப்பாய் பொதுச் சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/- | 1,500/- | 500,000/- |
| 02) மாட்டிறைச்சிக்கடை, மானிப்பாய் | 400/- | 300/- | 1,500/- | 150,000/- |
| **02. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 01) சாவற்கட்டு சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/- | 1,500/- | 40,000/- |
| 02) நவாலி பிரசாத் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 300/- | 1,500/- | 12,000/- |
| **03. பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 01) பண்டத்தரிப்பு பொதுச் சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/- | 1,500/- | 125,000/- |
| 02) பண்டத்தரிப்பு சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1,500/- | 30,000/- |
| 03) பண்டத்தரிப்பு சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1,500/- | 10,000/- |
| 04) பண்டத்தரிப்பு சந்தை, கருவாட்டுக் கடை இல.1 | 250/- | 300/- | 1,500/- | 7,000/- |
| 05) பண்டத்தரிப்பு சந்தை, கருவாட்டுக் கடை இல.2 | 250/- | 300/- | 1,500/- | 7,000/- |
| **04. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 01) மாசியப்பிட்டி சந்தை, மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1,500/- | 10,000/- |
| 02) மாசியப்பிட்டி சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1,500/- | 6,000/- |
| 03) இளவாலை சந்தை, மாட்டிறச்சிக்கடை | - | 300/- | 1,500/- | 10,000/- |
| 04) மாதகல் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1,500/- | 4,000/- |
| 05) மாதகல் சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1,500/- | 10,000/- |

**முக்கிய குறிப்பு:-**

**அத்துடன் கேள்விக் காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள் சேவைகள் வரியான 12.5%ஐயும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.**

*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,*
*தலைமைச் செயலகம்,*
*மானிப்பாய்.*
*2001-12-18*

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(C/19868)

## யாழ். கல்வி வலய பணிப்பாளரிடம் கோரிக்கை

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வர்த்தகப் பிரிவை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் ஒரேஒரு மகளிர் கல்லூரியாக அச்சுவேலி புனித திரேசாள் செயற்படுவதோடு புத்தூர் - இடைக்காடு புது திக்கு இடைப்பட்ட பிரதேச பாடசாலைகளில் வர்த்தகப் பிரிவு செயற்படாமல் இருப்பதையும் கருத்தில் கொண்டு புதிய கல்வி ஆண்டில் வர்த்தகப் பிரிவு செயற்படுவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ச உயர்தர கலைப் பிரிவு மட்டும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க-11)

## கரோல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.21

பாண்டியன் தாழ்வு தவத்திரு தோமஸ் கலைஞர் மன்றம், கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் முகமாக கரோல் நிகழ்ச்சிகளை இன்று ஆரம்பிக்கவிருக்கின்றது.

இன்று முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை பாண்டியன் தாழ்வு பகுதிகளிலும், எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் கொய்யாத் தோட்டம் பகுதியிலும் இந்தக் கரோல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (க-4)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நவாலி,டிசெ.21

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (க-100)

## உதவிப் பண கொடுப்பனவுகள்

நவாலி,டிசெ.21

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காச நோய் தொழு நோய் யானைக்கால் நோய் என்பவற்றிற்கான உதவிப்பணத்திணைப் பெறுபவர்களினதும டிசெம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-100)


## விற்பனைக்கு

SHARP L.C.D.
VIDEO PROJECTOR
165 அங்குலம்
கொழும்பில் இருந்து
கொண்டு வரப்பட்ட
அதிநவீன ரகமானது.

தொடர்பு:
ராஜன் எலக்ரோனிக்ஸ்
பண்டிதலச்சி. அச்சுவேலி. (96154)

கொலைக் குற்றத்திலிருந்து

# படை அதிகாரிக்கு விடுதலை! அத்தோடு பதவி உயர்வும்!!

தென்மராட்சி,டிசெ.21

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வர்த்தகப் பெண்மணியை சுட்டுக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட படை அதிகாரி அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன் அவருக்கு பதவி உயர்வும வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள தனது வர்த்தக நிலையத்தை சம்பந்தப்பட்ட பெண் மூடிவிட்டு 200 மீற்றர் தூரத்தில் உள்ள தனது வீட்டுக்கு இரவு 8.00 மணியளவில் சென்று கொண்டிருந்த சமயம் அப்பகுதியில் கடமையிலிருந்த படையினர் அவரைத துரத்திச் சென்று அவரது வீட்டு வாசலில் வைத்து சுட்டுக்கொன்றதாகக் கூறப்பட்டிருந்தது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த தெய்வேந்திரன் சகுந்தலா தேவி (வயது 46) என்னும் நான்கு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக அங்கு கடமையிலிருந்த இரண்டு படையினர் மது சாவகச்சேரி பொலஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல செய்யப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட படையினர் பின்னர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் லெப்டினன்ட் தரத்தில் உள்ள ஒருவர் இவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் அலுவலகத்தினால் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருக்கு கப்டன் தரத்திற்கு பதவியுயர்வும் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-117)

## நவிண்டிலில் கடும் சோதனை

தென்மராட்சி,டிசெ.21

உடுப்பிட்டி வதிரி வீதியில் பயணம் செய்த இளைஞர்கள் கடந்த புதன்கிழமை நவிண்டில் பகுதியில் கடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களின் அடையாள அட்டைகள் சோதனையில் ஈடுபட்டவர்களால் வாங்கப்பட்டு 'சென்றி'க்குள் இருந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், பத்து நிமிடங்களின் பின்னர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதாகவும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

(க-117)

# வெளியூர்த் தபால்கள் அடங்கிய 375 பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,டிசெ.21

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்துசேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 375 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டன. இத்தபால்கள் இன்றுமுதல் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 45 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நத்தார் பண்டிகைக் காலத்தின் பின்னர் இந்தக் கப்பலின் சேவை அடுத்தாண்டு ஜனவரி மாதமே இனிமேல் நடைபெறும் எனத்தெரிவிக்கப்பட்டது. (உ-180)

## கடத்தப்பட்ட மாணவி மீட்பு

தென்மராட்சி,டிசெ.21

பதினான்கு வயதுப் பாடசாலை மாணவி மூன்று இளைஞர்களால் கடத்தச் செல்லப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை தும்பளை இலட்சுமணன் தோட்டப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக - மூன்று தினங்களின் பின்னர் மாணவியையும் இளைஞர் ஒருவரையும் பருத்தித்துறைப் பொலீஸார் கைதுசெய்தனர். அவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாணவியைப் பெற்றோருடன் செல்ல அனுமதித்த நீதிவான், இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய இரு இளைஞர்களையும் கைதுசெய்து ஆஜர் செய்யுமாறு பொலீஸாரைப் பணித்தார். (உ-117)

## குடாநாட்டில் மீண்டும் டெங்கு?

குடாநாட்டில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவி வருவதாகச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரியில் தற்போது சிகிச்சை பெற்றுவரும் இருவர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இவர்களின் இரத்தத்தை பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-139)

## கருத்தரங்கு

யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினரின் ஏற்பாட்டில் 'நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி' எனும் தலைப்பில் றுகுணு பல்கலைக்கழக குடிசார் சூழலியல் பொறியியற்றுறைத் தலைவர் கலாநிதி ஏ.கே. சோமசுந்தரேஸ்வரனின் கருத்துரை வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் ஆர்வலர்கள் வரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ:21

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கத்தை மறுசீரமைப்பது குறித்து ஆராய்வதற்காக யாழ். மத்திய கல்லூரியில் இன்று பிற்பகல் நடைபெறவிருந்த கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கூடைப்பந்தாட்டத்தில் கலந்துகொள்ளும் பாடசாலைகளின் அதிபர்களும் விளையாட்டுப்பொறுப்பாசிரியர்களும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ)


## தவறிவிட்டது

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியில் வசிக்கும் பெண் ஒருவரின் கைச்சங்கிலி சிறுப்பிட்டிக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் அச்சுவேலி மினிபஸ்ஸில் பயணம் செய்தபோது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி மினிபஸ் சங்கத்தில் ஒப்படைக்கவும். (C/19878)



## நல்லூர் றோட்டறக்ட் கழகமும் யாழ். றோட்டறிக் கழகமும்

விவசாயபீட தகவல் தொடர்பு மையத்துடன்

இணைந்து நடத்தும்

# பாதீனியம் அழிப்பு செயற்றிட்டம்

இடம் : கோப்பாய் வடக்கு, கண்ணகி சனசமூக நிலையம்

காலம் : இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை 9.30 a.m.

நிகழ்ச்சி : கருத்தரங்கும், சிரமதானமும்

விவசாயிகளையும் பிரதேச மக்களையும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பாதீனியம் பற்றி முழு அறிவைப் பெறுவதுடன் எம்முடன் சிரமதானத்திலும் இணைந்து உங்கள் பிரதேசத்தை பாதீனியத்திலிருந்து விடுவிக்க இருகரம் நீட்டி அழைக்கிறோம்.

(C/19875) - செயற்றிட்ட இயக்குநர்.



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கம்பர்மலை - வல்வெட்டி

வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

மேற்படி எமது ஆலயத் திருப்பணிக்காக நிதியை ஒதுக்கித் தந்துதவிய, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய



திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும் -

அவர்சார்ந்த உறுப்பினர்களையும் -


நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

பரிபாலனசபை - வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

(C-19871)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 10 - 1928



மறைவு 16 - 12 - 1996

### மகேஸ்வரி துரைரத்தினம் (மதி)

[இளைப்பாறிய ஆசிரியர், யா/தங்கானை சிறைப்பிரகாச ம.வி.]

திதி: பூர்வபக்கஷஷ்டமி 21.12.2001

ஆண்டுகள் ஐந்து சென்றுவிட்டன – அவனியை நீங்கி

அன்னையே உம் நினைவலைகள் நீங்குமா எம்மைவிட்டு

அறிவுடைமை அஞ்சா மனவுறுதி யாவையும் தந்தாயே

ஆயினும் உங்கள் இன்முகமும் ஆறுதல் கூறும் தங்களின் வார்த்தைகளும்

அகலுமோ எங்கள் நெஞ்சைவிட்டு.

...ங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"இரத்... ...வனம்" கணவர், மக்கள், மருமக்கள்,

சண்டி... ...ப் (96158) பேரப்பிள்ளைகள்.

## நாளை கூடைப்பந்தாட்ட பயிற்சி

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் மாவட்டத்தின் 17 வயது, 21வயது பிரிவு ஆண்கள் அணிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்கான பயிற்சிகள் நாளை காலை 8 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வல்லிபுரம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லிபுரம் நேற்று (20.12.2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் இராசேஸ்வரி, செல்வநாயகம், இராசநாயகம், சாந்தநாயகி (யாழ். போதனா வைத்தியசாலை), கலாநாயகி (பிரான்ஸ்), சிவநாயகம், இராசகுமாரி (பிரான்ஸ்), தனநாயகம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயகுமாரி, செல்வக்குமாரி (பிரான்ஸ்), ஜெயக்குமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயரட்ணம், சலீமா, நவமணிதேவி, லோகலிங்கம் பிரான்சிஸ் (பிரான்ஸ்), புனிதவதி, அன்ரன் (பிரான்ஸ்), உதயகுமாரி (இந்தியா), ஈஸ்வரன் (பிரான்ஸ்), சூரியகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சுதாகரன், சுதர்ஜினி, (சுவிஸ்), தர்ஜினி, வில்வராஜ், வினித்தா, டிசானி, நிவேதன், நிவேதா (பிரான்ஸ்), நிதர்சன், மிருசிகா (இந்தியா), ஜெனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

*ஐயனார் கோயிலடி,* செல்வநாயகம்

*சுன்னாகம்.* (96161) (மகன்)

## திருமதி நாகலிங்கம் சின்னம்மா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் யாழ். பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி நாகலிங்கம் சின்னம்மா நேற்று (20.12.2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற பிரபல கட்டட ஒப்பந்தகாரர் நாகலிங்கத்தின (சேனாதிராஜா) அன்பு மனைவியும் நித்தியறஞ்சிதன் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர் - கொழும்பு), நித்தியறஞ்சினி, யோகராஜா (சாந்தன், பிரபல கட்டட ஒப்பந்தகாரர் - பிள்ளையார் மெற்றல் கிரேசர் உரிமையாளர் - யாழ்.), சுமங்கலி, மங்களேஸ்வரி (பிரான்ஸ்), தனேந்திரா ஆகியோரின் அன்புத்தாயாரும், தேவிகா, தங்கவேல் (C.T.B. கணக்காய்வாளர், வவுனியா), வசந்தராஜா, புஸ்பமலர், வரதராஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெரீன், திருவரன், கிருசாந்தன், நிரோஜன், ஜிலாந்தினி, அபிலாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

*இல17, 5ஆம் ஒழுங்கை,* நா.யோகராஜா

*பிறவுண் வீதி,* (சாந்தன்)

*யாழ்ப்பாணம்.* (96162)

## செல்லப்பா துரைராசா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், யாழ்ப்பாணம் பிரதம தபாலகம்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா துரைராசா நேற்று (20.12.2001) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மனோகரன் (யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், மனோகரன் (பிரான்ஸ்), வசந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், லக்ஸ்மன், யுன்சன், அனுஷன், ஜனரஞ்சினி, சிவாம்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மயில்வாகனம் சோபனத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*மூத்த விநாயகர் வீதி,* து.மனோகரன்

*நல்லூர்.* (96163) (மகன்)

## கனகசபை பாலகுருசுவாமி

சுன்னாகம் கனகசபை பாலகுருசுவாமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை உபாத்தியாயர் (மல்லாகம் ம.வி.) - சேதுநாயகி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற நித்தியானந்தன் (ரயர் மற்றும் சிமெந்துக் கூட்டுத்தாபனங்களின் முன்னாள் வரியூட்டுநர்), யோகசிவாமணி, பவானிதேவி, கேதாரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்வக்குமாரன் (அதிபர், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை), ஆனந்தகுமாரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*பனிக்கிளாவத்தை,* செல்வக்குமாரன்

*சுன்னாகம்.* (C/19877) (சகோதரன்)

## சின்னத்தம்பி முருகானந்தன்

(பிரதம எழுதுவினைஞர்)

அல்வாய் வடக்கு, குரும்பியாவத்தையைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகானந்தன் நேற்று (20.12.2001) வியாழக்கிழமை சிலாபத்தில் காலமானார்.

அன்னார் செல்லம்பிகையின் அன்புக் கணவரும் அரவிந்தன் (கொழும்பு), ஆதித்தன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேஸ்வரி, கணேசானந்தன், சிவனேஸ்வரி, பரமேஸ்வரி, பவானந்தன், திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை சிலாபத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*குரும்பியாவத்தை,* நா.சித்திவிநாயகம்

*அல்வாய் வடக்கு.* (C/19874) (மைத்துனர்)

## காவல்துறையினர் மோதலில் உயிரிழப்பு!

வவுனியா,டிசெ.21

மணலாறுப் பகுதியில் அண்மையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த 3 சிறப்புப் படை வீரர்கள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

உயிரிழந்த 3 பேரின் பெயர்கள் வருமாறு :-

சிவலிங்கம் (பொன்னுத்துரை சிவலிங்கம் - ஓமந்தை), ஜோன்சன் (அருளானந்தம் ஜோன்சன் - யாழ்ப்பாணம்), நியூட்டன (அமுதநாதன் நியூட்டன் - யாழ்ப்பாணம்) (ம-10-164)

## இந்தியாவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த விடயத்தில் எந்த ஒரு தரப்பாவது ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ளுமானால் அந்தத் தரப்புக் குறித்து மற்றைய தரப்புக்கு சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

"புலிகளைத் தடை செய்த காரணத்தால் - ஏனைய சில நாடுகளுடன் சேர்ந்து - அனுசரணையாளராகும் தகுதியை இந்தியா இழந்துவிட்டது.

"பேச்சு மூலமான தீர்விலும் அதன இயல்பான போக்கிலும் தனது நலன் கருதிய செல்வாக்கை இந்தியா பிரயோகிக்கும் என்பதால் அனுசரணையாளர் தகுதி இந்தியாவுக்கு இல்லை என்றே புலிகள் கருதுகின்றனர்."

- இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கின்றது. (உ)

## மகேஸ்வரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ ஒஸ்டின் பெர்னாண்டோ - பாதுகாப்பு

★ திருமதி தாரா விஜேதிலக - நீதி, சட்டம்,சீர்திருத்தம், தேசிய ஒருமைப்பாடு.

★ திருமதி ஜெகராஜசிங்கம் - சமூகநலன்புரி.

★ ஏ.ஜெயரட்ணம் - புனர்வாழ்வு அபிவிருத்தி, அகதிகள். (உ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைக் குறிப்பிட்டு அதற்கு முன்னரே வீடுகளிலிருந்து புறப்பட்டு சிங்கள ம.வி.மைதானம் வரை வரலாம் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். பயணிகள் விமான சேவை குறித்து அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

அதையடுத்தே விமான சேவையை தினசரி நான்காக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு வழி விமானக் கட்டணத்தை 4 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாகக் குறைக்கும்படி தாம் வற்புறுத்தியுள்ளதாகவும் -

அது குறித்து மிகவிரைவில் ஒரு முடிவு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் -

அமைச்சர் மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை -

'வடக்கில் நிலவிய காலநிலை மற்றும் மழை காரணமாக நேற்று பலாலிக்கான பயணிகள் விமான சேவை நடைபெறவில்லை. (உ)

## யுத்தநிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் செய்துள்ளனர்.

யுத்தம் நிறுத்தப்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்தான். அதற்காக அரசாங்கம் யுத்தநிறுத்தம் செய்யவேண்டியது அவசியமில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தமிழ்க் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் கூட மன்னார் நகரப் பகுதியில் சிறுகுழந்தை ஒன்றின் தந்தையான ஆனந்தராசா என்னும் இளம் குடும்பஸ்தர் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். இத்தகைய உயிர் பறிப்புக்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அதாவது படையினருடனான மோதல் சம்பவங்கள் மட்டுமன்றி, மரண அச்சுறுத்தல் விடுப்பது முதல் உயிர்ப் பலி எடுப்பது வரையிலான அனைத்துச் சம்பவங்களும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் வேறுவகையில் சொல்வதானால் தமிழ்பேசும் மக்கள் தமது எண்ணக் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய ஜனநாயக சூழல் உருவாக்கப்பட வேண்டும். தமிழ்பேசும் மக்களின் தலைவிதி புலிகளின் ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வதுதான் என்று எவரும் நிர்ப்பந்திப்பது பொருத்தமானது அல்ல என்பதையும இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

ஏனெனில் அரசுடன் பகைமை தவிர்ப்பு, மோதல் தணிவு என்பவற்றைக் கடைப்பிடித்த காலங்களிலேயே புலிகள் மாற்று அரசியல் சக்திகள் மீது போர் தொடுத்து வந்துள்ளனர் என்பது வரலாறு கற்பிக்கும் பாடம். உதாரணமாக கொழும்பில் பிரேமதாஸா அரசுடன் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை எட்டப்பட்டு பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் மற்றும் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும் இந்தியப் படையினரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து காணாமற்போன பலரது கதி இன்னமும் எவராலும் வெளிப்படுத்தப்படவில்லை.

எனவே, புலிகள் அரசுடன் சமாதானத்தையும் படையினருடன் மோதல் தவிர்ப்பையும் பேண முன்வருவதுபோல ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளோடும் அர்த்தபுஷ்டியான புரிந்துணர்வைக் காணவும் முன்வர வேண்டும். அப்போதுதான் மக்கள் உண்மையான சமாதானத்தைக் காணவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கண்டு நிலைநிறுத்தவும் வழியேற்படும்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து இயல்புநிலை ஏற்படவும், 1977க்கு முன்னர் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்திருந்த நிலை மீண்டும் தோன்றவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

எது எவ்வாறாயினும், பகைமை உணர்வுகள் புறம் தள்ளப்பட்டு மோதல் சம்பவங்கள் முடிவுக்கு வரும சூழ்நிலை நிலைபெறுவது மகிழ்ச்சிக்கு உரியது. ஆனால் இந்த மகிழ்ச்சி வெறும் நீர்க்குமிழிகள் போலாகி விடக்கூடாது என்பதே எமது பெரும் விருப்பமாகும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விஷமிகளின் செயலால் குடிதண்ணீருக்காக மக்கள் அலைச்சல்

தென்மராட்சி,டிசெ.21

சில விஷமிகளின் ஈனச் செயலால் 2 ஆயிரதத்துக்கு மேற்பட்ட மக்கள் குடிதண்ணீருக்கு அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் கரவெட்டி அத்துளு அம்மன் கோயிலடிப் பகுதியில் இரு கிராமங்களுக்கிடையே இடம்பெற்ற மோதலை அடுத்து நேற்றுமுன்தினம் இப்பகுதியில் உள்ள மக்களால் பாவிக்கப்படும் குழாய்க் கிணற்றினுள் சில விஷமிகள் கழிவு எண்ணெயை ஊற்றியதாகக் கூறப்படுகின்றது.

இக்குழாய் நீரையே குடிதண்ணீராகப் பயன்படுத்தும் 2 ஆயிரத்துக்கும மேற்பட்ட மக்கள் இதனால் பெரிதும பாதிககப்பட்டுள்ளனர். குடிதண்ணீருக்காக இவர்கள் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## சமாதான முயற்சிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையை மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

நோர்வே அரசின் உதவியுடன் சமாதான முயற்சிகளை நீங்கள் ஆரம்பித்த போது நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம்.

அந்த முயற்சியை உளப்பூர்வமாக நீங்கள் ஆரம்பித்தமைக்காக நாம் நன்றி செலுத்தும் அதே சமயம், அதில நீங்கள் ஈடுபாட்டைத் தவிர்த்து. அசிரத்தை காட்டி இறுதியாக கைவிட்ட போது நாம் மிகுந்த வேதனை அடைந்தோம் என்பதையும் கூறவிரும்புகின்றோம்.

அரசின் முதலாவது நிகழ்ச்சித் திட்டமாக அமைய வேண்டியது சமாதானமே என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் மூலம தமிழ் மக்களும் பலமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

எதிர்த்தரப்பில் தங்களின் பொ.ஐ. முன்னணியே பெரிய கட்சி. அந்த வகையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையும் கட்சியின் தோல்வியால் ஏற்பட்ட மனநோவையும் நாட்டின் நலன் கருதி ஒதுக்கி வைக்குமாறு தங்களிடம் விண்ணப்பிக்கிறோம்.

அமைச்சுப் பொறுப்புக்கள் அனைத்தையும் கைவிடுவதில் தாங்கள் காட்டிய அதே தாராளத்தை -

நீங்கள் விட்ட இடத்திலிருந்து சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் விடயத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலும் காட்டுமாறு நாம் கோருகின்றோம்.

இதேவிடயத்துக்கு ஒத்துழைப்பு தரும்படி நீங்கள் மன்றாடிய சமயத்தில், அதைத் தருவதற்கு ஐ.தே. கட்சியும் தவறியிருந்தது என்பது உண்மையே. இரு பக்கங்களிலும் தவறுகள் விடப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகளின் விட்டுக் கொடுக்காத - முரண்டுபிடிக்கும் - போக்கினால் தினசரி அப்பாவிகளின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கையில், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கத்தான் வேண்டுமா?

எனவே, யுத்தத்தை நிறுத்தி, பேச்சுக்களை ஆரம்பிக்க வழிசெய்யும் சமாதான முயற்சிகளுக்கு பொ.ஐ. முன்னணியின் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரதும் ஆதரவைப் பெற்றுத் தருமாறு வடக்கு, கிழக்கு மக்களின் பெயரால் தங்களைக் கோருகின்றோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# முன்னாள் அமைச்சர்கள் சிலர் வெகுவிரைவில் கைதாகலாம்!

பொஐமுன்னணி அரசின் முன்னாள் முக்கிய அமைச்சர்கள் சிலர் வெகு விரைவில் கைது செய்யப்படலாம் என்று அறிய வருகிறது.

இவர்களைக் கைதுசெய்வதற்கு முன், நேரடியாகப் பல்வேறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. லஞ்ச ஊழல், மோசடி, அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனங்களை பொதுநிர்வாக அமைச்சின் கட்டளைகளை மீறி தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தியமை முதலான குற்றச்சாட்டுகள் தொடர்பாகவே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேசமயம், பல கோடி ரூபாய் மோசடி செய்தார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் விமல் வீரவன்ஸவிற்கு எதிரான லஞ்ச ஊழல பற்றிய ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் முதல் கட்டம் முடிவடைந்த நிலையில் உள்ளதாகத் தெரிகின்றது.

## ஜி.சீ.ஈ. பரீட்சை நேற்று ஆரம்பம்

ஜி.சீ.ஈ. (சாதாரண தரப்) பரீட்சை நேற்று ஆரம்பமானது.

பரீட்சையில் மோசடி இடம்பெறுவதைத் தடுப்பதற்காக இம்முறை புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வினாத்தாள் வைக்கப்படும் 'பக்கெட்' ஒட்டப்பட்டு, அதில் பிரிக்கப்படக் கூடிய அனைத்துப் பகுதிகளும் ஸ்ரிக்கரால் ஒட்டப்பட்டு கையொப்பமிடப்படல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேட அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. (உ-117).

## தேசிய அரசு யோசனையை ஜே.வி.பி. நிராகரிப்பு

தேசிய அரசாங்கம் அமைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையை ஜே.வி.பி. நிராகரித்துள்ளது.

ஜே.வி.பி. நாடாளுமன்றக்குழு செவ்வாய்க்கிழமையன்று கூடி ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டது.

ஐ.தே.முன்னணி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியில் இருந்தவாறே நாட்டின் நலன்களை முன்வைத்து முழு ஆதரவு அளிப்பது என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.


புதிய வருடத்தில்____
அதிரடி விலைச் சலுகையில்____
அதி நவீன கணனிகள்____

நியாயமான விலையில்,
அதி நவீன கணனிகளைப் பெற்றுக் கொள்ள
உங்கள் தெரிவு....................

WORLD'S NO.1 ORIGINAL
INTEL PROCESSOR
1000 MHz / 1400 MHz / 1700 MHz with
256 Cache Memory,
Shuttle Mother Board,
40 GB Segate Hard Disks,
14" View Sonic Monitors,
Acer 52X CD Rom Driver,
Modem
Printers (Laser, Dot Matrix),
Scanner, UPS

COMPUTER WITH MULTI MEDIA
Pentium II / III / 4
BONUS: PAPER HOLDER & DUST COVER

Generator இலும் தொழிற்படும்
Computer களுக்குப் பாவிக்கக்கூடிய
"FENTON" UPS (2 Year Woranty)

IBMS IT MARKET
No.701,K.K.S. Road, Jaffna. TP 021-3165


## மரண அறிவித்தல்

### சுவாமிநாதர் பாலசிங்கம்

*(ஓய்வுபெற்ற முன்னாள் உத்தியோகத்தர் - பலாலி. கட்டுநாயக்க விமான நிலையம்)*

கொழும்புத்துறை மேற்கு, சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும் சுணடுக்குளி விதானையார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (19.12.2001) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதர் - நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரரும் ஜெயக்குமார் (கனடா), சிவகுமார் (கனடா), சாந்தகுமாரி (கனடா), ஜெயக்குமாரி (ஆஸ்திரேலியா), வசந்த்குமாரி (இந்தியா), வசந்தகுமார் (கனடா), நந்தகுமார் (யாழ்.பல நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் லோகநாயகி (கனடா), பவானி (கனடா), சிவநாதன் (கனடா), நற்குணரத்தினம் (ஆஸ்திரேலியா), பிரபாகரன் (இந்தியா), சிவவேணி (கனடா), செல்வரஞ்சினி (ஆசிரியை - நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீதா, லக்சன், சாருகி, விந்திகா, பிரமியா, நர்மதா, பிருந்தா, நவீனா, தாயினி, ஸ்தாஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு (ப.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி.* (C/19866)

தகவல்:
பா.நந்தகுமார் (மகன்)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
✪ காசி
✪ மஜ்னு
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

BEACON
யாழ்நகர்
வெளிவாரிப் பட்டப்படிப்பு
1st in Com - 2003
எமது விரிவுரையாளர் குழு:
Acc. - திருகலைச்செல்வன்
Manage. - திரு.பசில்
Maths & stat. - திருதவசேகர்
Eco. - திரு.விக்கி
ஆரம்பம்:- ஞாயிறு (23.12.2001) காலை 10.00 மணி
குறிப்பு:- 1st in Com. 2002 வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (06135)

NEW SCIENCE COLLEGE
PHYSICS
2003 and 2002
காந்தப்புலம்
ஆரம்பம்:-
சனி, ஞாயிறு - 6.00 - 7.00
வெப்பவியல்
ஆரம்பம்:-
சனி, ஞாயிறு 7.00 - 8.00
By R.குகன் (B.Sc.)

Cool 3D
Adobe Primmer
DIPLOMA IN VIDEO MIXING

Adobe Photoshop
& Flash
சிறந்த வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும், பலரதும் அபிமானத்தைப் பெற்ற இக்கற்கைநெறி பலரது வேண்டுகோளிற்காக மீண்டும் ஆரம்பமாகிறது.
பதிவுகளை 27-12-2001 ற்கு முன் மேற்கொள்ளவும்
மேலதிக விபரங்களிற்கு
Director
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna
TP: 0094-21-2674 e-mail stpedu@hotmail.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.